விலை: 30.00
பக்கங்கள் : 12 + 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 098 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 13 ஞாயிற்றுக்கிழமை (27.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## அரசை தோற்கடிக்க இருமுனைத் தாக்குதல்

# ராஜபக்ஷ அரசு கவிழும் தருணம் வந்துள்ளது!

### முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில ஆருடம்



- பாதீட்டை தோற்கடித்து அரசை வீழ்த்துவோம்.
- அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை.
- அரசு பெரும்பான்மையை இழக்கும்.
- உரிய தருணம் வரும்போது எமது பலத்தைக் காட்டுவோம்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## விலை அதிகரித்தும் நட்டத்தை எதிர்நோக்கும் ஐ.ஓ.சி

(கொழும்பு)
நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எரிபொருளுக்கு விலை அதிகரிக்கப் பட்டுள்ள போதிலும் 02

## பொருளாதார நெருக்கடி மக்களுக்கு நிவாரணம்

மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)
நாட்டில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர் 12

## கடத்திச் செல்லப்பட்டவரை வாகனத்தால் மோதி கொலை செய்ய முயற்சி

கிளிநொச்சியில் பயங்கரம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி கனகபுரம் வீதியில் நபர் ஒருவரை கும்பல் ஒன்று வாக 11

## பிரிவினையை ஏற்படுத்த கூட்டமைப்பு முயற்சித்தால் எதிர்ப்பை வெளியிடத் தயார்

உதய கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)
அரசாங்கத்துக்குள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தங்களது பிரிவினைவாத நோக்கங்களை நிறைவேற்ற முயற்சித்தால் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது தரப்பினருடனேயே செயற் 11

## ராஜபக்ஷ தலைமையிலான அரசை எத்தரப்பினாலும் கவிழ்க்கவே முடியாது!

இராஜாங்க அமைச்சர் காஞ்சன சவால்



(கொழும்பு)
ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசை எந்தத் தரப்பாலும் கவிழ்க்கவே முடியாது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சிக்கு எதிர்க்கட்சியே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“2015ஆம் ஆண்டு 8.2 வீதமாக இருந்த வெளிநாட்டுக் கையிருப்பு 2019 11

## அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யத் தயார்

நாமல் திடீர் அறிவிப்பு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துப்படி அமைச்சரவையை குறைப்பதற்கு அவர்கள் முன்னுதாரணமாக செயற்பட்டால் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யத் தயார் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 11

## நாட்டின் அரச தலைவர்கள் சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை கைவிடப் போவதில்லை

சட்டத்தரணி ஸ்ரீகாந்தா அறிக்கை

(யாழ்ப்பாணம்)
பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதியும் மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச்சர்களும்கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் 11

## கேகாலை மயானத்தில் மின்னல் தாக்கியதில் 25 பேர் படுகாயம்

(கேகாலை)
கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல பிரதேசத்தில் நேற்று மாலை இறுதிச் சடங்கில் கலந்துகொண்டிருந்த குழுவினர் மின்னல் 11

## அராஜக அரசை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைவோம்



எதிர்க்கட்சி தீப்பந்தத்துடன் கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)
அரசமைப்புச் சட்டத்தில் அரசாங்கத்திற்கு நீண்டகாலம் உள்ளது. ஆனால் மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு நீண்டகாலம் இல்லை என 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலகத் தமிழ் பல்கலைக்கழகம் அமெரிக்கா

**பட்டமளிப்பு விழா**

கொனிக்கா கலர் லாப் மற்றும் சிறிராம் ஜுவல்லர்ஸ் உரிமையாளரும்
தாயக அறக்கொடை நிறுவனத்தின் நிர்வாகியுமான



## திரு. S.V.சிறிதரன்

அவர்கள் நேற்று 26.03.2022 கொழும்பிலுள்ள
**தாஜ்சமுத்ரா ஹோட்டலில்**
அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தினால்
நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில்

## “ சமூக சேவைக்கான கலாநிதி ”
( Doctor of Social Service )

பட்டத்தை பெற்றமைக்கு பாராட்டி வாழ்த்துகின்றோம்.


Congratulations

அன்புடன் வாழ்த்தும்
கொனிக்கா கலர் லாப்
மற்றும்
சிறிராம் ஜுவல்லர்ஸ்
ஊழியர்கள்

(C-4066)


# மரண அறிவித்தல்

## கந்தையா பாலசுப்பிரமணியம்
**(பிரதம லிகிதர் - இலங்கை போக்குவரத்துச் சபை)**



பிறப்பு 13.03.1939 — இறப்பு 24.03.2022

யாழ்.சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 24.03.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான K.T.கந்தையா (திருவிளங்கம்) - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும் தெய்வநாயகியின் (பாப்பா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானேந்திரம் (பபி) மற்றும் குகேந்திரன் (றஞ்சி - சுவிஸ்), தனேந்திரன் (பேபி - லண்டன்), நிரஞ்சினி (செல்லா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜாதா (சுவிஸ்), லோகினி (லண்டன்), கணேசதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதீஸ் (சுவிஸ்), விஸ்வா (சுவிஸ்), காவியா (லண்டன்), நிதர்சன் (லண்டன்), மகிமா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கெங்காகுலதிலகம் (கனடா), குகதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற குமாரசாமி (சாமி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜலக்சுமி (கனடா), காலஞ்சென்ற பத்மினி (லண்டன்) மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற Dr.சிவபாதம் (குகன் வைத்தியசாலை, மல்லாகம்), தம்பாப்பிள்ளை (நமீபியா) மற்றும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சர்வலோகேஸ்வரி (சுதுமலை) மற்றும் இராஜேஸ்வரி (கனடா), கணேசதாசன் (சுதுமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மைதிலி (கனடா), காண்டீபன் (கனடா), ஜனகன் (லண்டன்), ஆதவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் பிரசாந்தன் (கனடா), கீதா (லண்டன்), சுகந்தினி (சாந்தா - சிங்கப்பூர்), மயூரன் (லண்டன்), சியாமளா (மாலா - கொழும்பு), யசோதினி (கொழும்பு), கோகுலன் (நமீபியா), நிராகுலன் (லண்டன்), சத்தியாகுலன் (நமீபியா) ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.03.2022) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுந்தரவாசா,
பங்களா லேன், மல்லாகம்.

(10801)

தகவல்:


# வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் எலக்ரிக்கல், பிளம்பிங் கடைக்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.

076 192 3444
077 482 1912

(C-4068)



# காணி விற்பனைக்கு

கச்சாய் வீதி, கோவில் குடியிருப்பில் காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு (10805)

076 915 5733


## நட்டத்தை...

தமது நிறுவனம் நட்டத்தை எதிர்கொண்டுவருவதாக லங்கா ஐஓசி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளர் மனோஜ் குப்தா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 15 ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு 65 ரூபாவும் நட்டம் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரவும் லங்கா ஐஓசி நிறுவனம் பெற்றோல்களுக்கு 49 ரூபாய் விலை அதிகரிப்பினை அறிவித்திருந்தது.

இதன் அடிப்படையில் ஒக்டைன் 92 ரக பெற்றோல் 303 ரூ. ஆகவும், ஒக்டைன் 95 ரக பெற் றோல் 332 ரூபா ஆகவும் அதிகரித்தது.

இந்நிலையில் லங்கா ஐஓசி நிறுவன முகாமையாளர் வெளியிட்ட கருத்திற்கமைய நட்டத்தினை ஈடு செய்வதற்காக மேலும் எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ஞா)


# அறிவித்தல்

எமது நிறுவனமாகிய "Advanced Technology System" 2019 ஆம் ஆண்டு முதல் 2022.02.28 வரை திருத்தம் செய்வதற்கு வழங்கிய உபகரணங்களை இதுவரை மீள பெற்று கொள்ளாதவர்கள் எதிர்வரும் சித்திரை மாதம் 02 ஆம் (02.04.2022) திகதிக்கு முன்னர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் மீள பெற்றுக் கொள்ளாத பொருட்களுக்கு எமது நிறுவனம் பொறுப்பு ஏற்காது.

நன்றி

நிறுவன உரிமையாளர் (10802)

021 221 9330, 076 781 7831



# வேலை வாய்ப்பு

உணவு உற்பத்தி நிலையத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு. தங்குமிட வசதியுடன் கவர்ச்சியான சம்பளம் வன்னி பெருநிலப்பரப்பில் பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு முன்னுரிமை.

- உணவு உற்பத்திகள் (இடியப்பம், பிட்டு, அப்பம்)
- பலகார வகை
- பொதியிடல் வேலைகள்
- உதவி முகாமைத்துவ பெண்கள்
- வீட்டுத் தோட்ட வேலை வாய்ப்புகள்
- சுத்திகரிப்பாளர்கள்
- உணவு பரிமாறுபவர்கள்
- சமையலாளர்கள்
- பில் கிளார்க்
- காசாளர்

உடனடி தொடர்புக்கு

077 791 7753

(10806)



# O/L 2022

## மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி




க.பொ.த (சா/த) கணிதம்:
**மாதிரி வினாத்தாள்** வெளிவந்துள்ளது.
விரிவான செய்கைகளுடன்
சுயமதிப்பீட்டுக்கு ஏற்றவகையில்
தயாரிக்கப் பெற்றது.

ஆக்கியோன்
**மகேசன் ஶ்ரீதரன்**
சேவைக்கால ஆலோசகர் கணிதம்
(ஓய்வுநிலை)

கிடைக்குமிடங்கள்:-
1. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
2. அன்னை புத்தகசாலை - யாழ்.
3. சாயி லங்கா புத்தகசாலை - மருதனார்மடம்
4. புத்தககூடம் - யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக

தொ.பே:- 077 235 5552

(10808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து யாழ். நகரில் முன்னணி ஆர்ப்பாட்டம்





(யாழ்ப்பாணம்)

**பொருட்களின் விலையேற்றத்திற்கும், பொருளாதாரச் சீரழி விற்கும் காரணமான அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட மொன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுச் சனிக்கிழமை யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்றது.**

இதன்போது எம் தேசத்தை அங்கீகரித்தால் உன் தேசமும் வளம் பெறும், அன்று ஆயு தத்தால் அழித்தாய் இன்று பட்டினியால் அழிக்கின்றாய், சுயாட்சி இருந்தால் மட்டுமே தமிழரின் பொருளாதாரத்தை நாம் மேம்படுத்த முடியும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் தமிழர் தேசத்தை அங்கீகரி, ஆசியாவின் அதிசயமே பெற் றோல் இல்லை டீசல் இல்லை பால்மா இல்லை, இனவாதம் மதவாதத்தால் பொருளாதா ரத்தை அழிக்காதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக் கப்பட்ட பதாகைகளை தாங்கி யவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத் திருந்தனர்.

இப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் பாராளுமன்ற உறுப் பினரான செல்வராஜா கஜேந்திரன் கட்சியின் உள்ளூராட்சி மன் றங்களின் உறுப்பினர்கள் மற் றும் பொதுமக்கள் ஆதரவாளர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(4-6-18-33-104)

## தமிழர்களும் எம்முடன் இணையலாம் அழைப்பு விடுக்கும் கம்மன்பில

(கொழும்பு)

நாம் தமிழர்களுக்கு எதிரானவர்கள் அல்ல என தெரிவித்த பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தமிழர்களும் எம் முடன் இணையலாம் என்றும் தெரிவித்தார்.

நாம் அரசியலையே எதிர்க் கின்றோம். மாறாக தமிழ் மக்களை எதிர்க்கவில்லை. தமிழர்களும் எமது பயணத் தில் இணையலாம்.

மேலும் மீண்டும் இந் நாட்டில் குடும்ப ஆட்சி ஏற்பட இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

(நி)

## அரிசி விலைகள் கனிசமானளவு அதிகரிப்பு!

(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடு கையில், இந்த வாரம் அரிசி விலை, குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.


அரிசி விநியோகம் வீழ்ச் சியடைந்துள்ளமையே இதற் குக்காரணமாகும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய் ச்சி மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அனைத்து வகை யான உள்ளூர் அரிசி வகை களின் விலைகளும், 3 ரூபாய் முதல் 13 ரூபாவுக்கு இடைப் பட்ட அளவில் அதிகரித்துள் ளதோடு இறக்குமதி செய்யப் படும் அரிசி வகைகளின் விலைகள், 9 ரூபாய் முதல் 18 ரூபாவுக்கு இடைப்பட்ட அள வில் அதிகரித்துள்ளன.

டொலருக்கு நிகரான ரூபா வின் பெறுமதி வீழ்ச்சியடைந் தமையால், இந்த விலை அதி கரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

(நி)

## இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய் சங்கர் இம்மாதம் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற் கொள் ளவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச் சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் அழைப்பின் பேரில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த உத்தி யோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்வதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

(நி)

## 2000 மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்குகிறது சீனா

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இலங் கைக்கு 2000 மெற்றிக் தொன் அரிசியை சீனா இலவசமாக வழங்க தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு சீன அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக கொழும் பில் உள்ள சீன தூதரகம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(நி)

## புதிய காகித தொழிற்சாலைகள் அமைக்கத்திட்டம்

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

தற்போது நிலவும் காகிதத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, எதிர் காலத்தில் நாட்டில் பல புதிய தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச் சர் எஸ். பி.திஸாநாயக்க தெரி வித்துள்ளார். ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை தரமுயர்த் துவதற்கும் எதிர்பார்ப்பதாகவும் நாட்டில் நிலவும் டொலர் நெருக் கடியால் காகித உற்பத் திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் தடை ஏற்பட்டுள்ளதா எனவும் தெரிவித்தார்.

(நி)

## பண்டிகைக் காலங்களில் அதிகளவில் ஒன்று கூடுவதை தவிருங்கள்

### சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் மக்கள் ஒன்றுகூடுவதை மட் டுப்படுத்துமாறு சுகாதார அதி காரிகள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

உரிய முறையில் தடுப்பூசி போடப்படாதவர்கள் இது தொட ர்பில் அவதானம் செலுத்த வேண் டும் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் தெரிவித்துள்ளார்.

(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட ரி10 கிரிக்கெட் சுற்றுப்போட்டி




வவுனியா மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளிற்கான ரி10 கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட கடினப் பந்து துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த சுற்றுப் போட்டி இடம்பெற்றுள்ளது.


இதன் போது விருந்தினர்களிற்கு மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டிருந்ததுடன் பிரதம விருந்தினரால் வெற்றிக்கிண்ணம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட கடினப்பந்து துடுப்பாட்ட சங்கத் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ் குமார், நகரசபை தலைவர் இ.கௌதமன், வட மாகாண கடினப்பந்து துடுப் பாட்ட சங்கச் செயலாளர் வி.சுந்தரலிங்கம் மற்றும் விளையாட்டு வீரர்கள், கிரிக்கட் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கிரிக்கட் சுற்றுப் போட்டியில் 18 அணிகள் போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)



# டோனி பதவி விலகல்; அணி நிர்வாகம் விளக்கம்




கப்டன் என்ற முறையில் சி.எஸ்.கே. மீது அக்கறை கொண்டுள்ள டோனி, அணியின் நலன் கருதி இந்த முடிவை எடுத்துள்ளார் என சி.எஸ்.கே. சி.இ.ஓ காசி விஸ்வநாதன் தெரிவித்தார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கப்டன் பதவியில் இருந்து எம்.எஸ்.டோனி திடீரென விலகினார். இதை அணி நிர்வாகம் உறுதிப்படுத்தியது. இதையடுத்து, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டனாக ஜடேஜா செயற்பட உள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சி.எஸ்.கே. அணியின் சி.இ.ஓ. காசி விஸ்வநாதன் அளித்த பேட்டியில், எம். எஸ்.டோனியின் முடிவை நாங்கள் எப்போதும் மதித்து வருகிறோம். அவர் எங்களுக்கு ஒரு தூணாக இருக்கிறார். தொடர்ந்து அப்படியே இருப்பார்.


கப்டன் பொறுப்பை ஜடேஜாவிடம் ஒப்படைக்க இது சரியான நேரம் என அவர் உணர்ந்ததால் அதை செய்துள்ளார். இந்த முடிவை எடுத்தது அவர்தான்.

டோனியின் முடிவு எங்களுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. இதுதொடர்பாக நாங்கள் கடந்த ஆண்டே விவாதித்துள்ளோம்.

ஜடேஜாவை அவர் இந்தத் தொடரில் வழிநடத்துவார். அணிக்கும் ஒரு சீனியர் வீரராக இருந்து வழிநடத்துவார்.

ஐ.பி.எல்.லில் டோனியின் கடைசி சீசனாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. தொடர்ந்து அவர் விளையாடுவார் என நம்புகிறேன் என தெரிவித்தார். (4-6)

# ஆறு வருடங்களின் பின் இலங்கை வருகிறது ஆஸி




இலங்கையுடன் மூவகை சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை வருகை தரவுள்ளது.

இலங்கைக்கு 6 வருடங்களின் பின்னர் விஜயம் செய்யும் அவுஸ்திரேலியா இங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 5 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர், 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது 20 தொடர் ஆகியவற்றில் விளையாடவுள்ளது.

இருபது 20 தொடருடன் ஆரம்பமாகி டெஸ்ட் தொடருடன் நிறைவடையவுள்ள இப்போட்டிகள் கொழும்பு, கண்டி, காலி ஆகிய விளையாட்டரங்குகளில் நடைபெறவுள்ளன.

2016 இங்கு வருகை தந்த அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் 0 - 3 என முழுமையாக தோல்வி அடைந்த போதிலும் சர்வதேச ஒருநாள் தொடரை 4 - 1 எனவும் சர்வதேச இருபது 20 தொடரை 2 - 0 எனவும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# பாகிஸ்தானை வீழ்த்தியது அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கு எதிரான நடைபெற்ற கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 115 ஓட்டங்களால் வெற்றியீட்டிய அவுஸ்திரேலியா, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற ஆட்டக் கணக்கில் தனதாக்கிக் கொண்டது.

பாகிஸ்தானில் 1998க்குப் பின்னர் அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் வெற்றியை ஈட்டியது இதுவே முதல் தடவையாகும்.

24 வருடங்களுக்கு முன்னர் மார்க் டெய்லர் தலைமையிலும் 1 - 0 என்ற தொடர் வெற்றியே அவுஸ்திரேலியாவுக்கு கிடைத்திருந்தது.

போட்டியின் கடைசி நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது 2 ஆவது இன்னிங்ஸை விக்கெட் இழப்பின்றி 73 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த பாகிஸ்தானின் வெற்றிக்கு மேலும் 278 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கிட்டத்தட்ட 11 மணித்தியாலங்கள் துடுப்பெடுத்தாடி 450க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த பாகிஸ்தான் இந்த டெஸ்ட் போட்டியில் சாதிக்கும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 5ஆம் நாள் ஆட்டத்தின் முதலாவது பகுதியில் அப்துல்லா ஷிபிக், அஸார் அலி ஆகிய இருவரது விக்கெட்களை இழந்த பாகிஸ்தான் பகல் போசன இடை வேளையின்போது 2136 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 3 விக்கெட்களை



இழந்த பாகிஸ்தான் பலத்த நெருக்கடிக்கு மத்தியில் தேநீர் இடைவேளையை எதிர் கொண்டது.

இமாம்-உல்-ஹக், பவாட் அலாம், மொஹமத் ரிஸ்வான் ஆகியோரே 27 ஓட்ட இடைவெளியில் ஆட்டமிழுந்தவர்களாவர்.

தேநீர் இடைவேளையின் போது 5 விக்கெட்களுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான், கடைசி 5 விக்கெட்களை 52 பந்துகளில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இழந்தபோது அதன் 2ஆவது இன்னிங்ஸ் 235 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித தட்டுப்பாட்டால் இடைநிறுத்தப்படும் பத்திரிகைகள்

(கொழும்பு)

**இலங்கையின் இரண்டு முக்கிய செய்தித்தாள்கள் காகிதப் பற்றாக்குறையால் தங்கள் அச்சுப் பதிப்புகளை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து இந்த முடிவெடுத்துள்ளதாக குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.**

22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கை, 1948ல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில், ஆங்கில மொழி நாளிதழான தி ஐலண்ட மற்றும் சிங்களப் பதிப்பான திவயின ஆகியவை "நிலவும் காகிதப் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு" ஆன்லைனில் மட்டுமே கிடைக்கும் என்று தெரிவித்துள்ளன. (நி)

# மிட்டாய் வியாபாரத்தை தொடர்ந்து நடத்துவதில் சிக்கல்

## – மிட்டாய் வியாபாரிகள் கவலை –

(கொழும்பு)

அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால் புத்தாண்டில் இனிப்பு வகைகளின் விலையை உயர்த்த வேண்டியிருக்கும் என மிட்டாய் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனி, அரிசி, பச்சைப்பயறு உள்ளிட்ட மிட்டாய்க்குத் தேவையான அனைத்துப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளதாலும், தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை 900 ரூபாவைத் தாண்டியதாலும் இனிப்புப் பொருட்களுக்கு உறுதியான விலை நிர்ணயம் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்பாராதவிதமாக விறகு மூட்டையின் விலை உயர்ந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனால், தங்களின் தொழில் நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# புதிய கட்சியை உருவாக்க இரகசிய நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் அதிருப்தி அடைந்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றி பிறிதொரு கட்சியை உருவாக்க இரகசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சு பதவி வகிக்கும் அமைச்சர்கள் சிலரின் திட்டங்களை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழு ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் இவ்வாறு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து பிரத்தியேகமாக பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# நீரில் மூழ்கிய பெண்ணை காப்பாற்றச்சென்ற இளைஞர்கள் பலி

(அவிசாவளை)

சீதாவக்க ஆற்றில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாத்திரை குழுவைச் சேர்ந்த பெண்ணொருவர் நீராடச் சென்றிருந்த வேளையில் நீரில் மூழ்கியுள்ளார். அவரை காப்பாற்ற முற்பட்ட போதே இவ்விருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்கள் ராஜகிரிய மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், நீரில் மூழ்கிய பெண் பிரதேசவாசிகளால் உயிருடன் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# அமைச்சர்களுக்கான விமான வசதிகளை மட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி மற்றும் கொரோனா நிலைமையினால், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு விமான வசதிகள் வழங்குவதை மட்டுப்படுத்த இலங்கை விமானப்படை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய தேவைக்காக, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே விமான சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

27.03.2022
பங்குனி 13, ஞாயிற்றுக்கிழமை
தசமி முன்னிரவு 6.47 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 2.10 மணிவரை
சுபநேரம்- 9.14-10.44 மணிவரை
இராகுகாலம் -4.44-6.14 மணிவரை

சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்



வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கனவு பலிதமுண்டு மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், பயணங்களால் பலனுண்டு.



பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம் பெறலாம், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம்காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.



சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனக்குழப்பம் அகன்று மரியாதை உயரும் நாள்.



இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான நாள்.



வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



தொழிலில் சில மாற்றங்களைச் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும்.



மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ரோகபயமுண்டு.



உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.



சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உறவினர் வழியில் மகிழ்ச்சி கூடும்.

அதிக அக்கறை அழிவில் முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரால் தாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி கண்டன பேரணி

(யாழ்ப்பாணம்)

**காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.**

அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வலிந்து

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்களின் தலைமையில் நேற்று நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கண்டனப் பேரணி தொடர்பில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் அ.லீலாவதி,

எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பிக்கும் கண்டனப் பேரணி முற்றவெளியில் நிறைவடையும்.

இந்த பேரணியில் கட்சி மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகளை கடந்து இந்த போராட்டத்தை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (4-6-33)

# மிருசுவிலில் விபத்து ஒருவர் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ9 வீதியால் உணவகத்திற்கு நடந்து சென்றவரை வீதியால் சென்ற கார் மோதியதில் அவர் தலையில் படுகாயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்தினை ஏற்படுத்திய கார் தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல்-10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாகப் பதினெட்டுத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருந் திருவிழாவில் எதிர்வரும்-13 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பரத் திருவிழாவும், சித்திரைப் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-6-18)

# சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைக்கக் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு-உதயசூரியன் கிராமத்தில் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான காணியை சாவகச்சேரி நகரசபை தந்துதவ வேண்டும் என நகரசபை உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் சிறுவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம்,போசாக்கு மற்றும் நன்நடத்தை ஆகிய விடயங்களை கருத்திற்கொண்டு அரசு மற்றும் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டிய தேவைப்பாடு நிலவுகிறது.

குறிப்பாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பின்தங்கிய கிராமமான உதய சூரியன் கிராமச் சிறார்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பகல் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

எனவே குறித்த நிலையம் அமைப்பதற்கு நகரசபை உதயசூரியன் கிராமத்தில் உள்ள தனது காணியை தந்துதவ வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)

# பொங்கல் விழா

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வலிகாம வலய கலைப்பீட மாணவர்களின் வருடாந்த பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரம் குழந்தைவேல் சுவாமிகள் பீடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி விழாவில் தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவர் ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(4-6-18)



யாழ் மாவட்டத்தில் நவீன முறையில் மேற்கொள்ளப்பட்ட "சசி" வர்க்க உருளைக் கிழங்குச் செய்கை அறுவடை விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் ஈவினை மத்திக் கிராமத்தில் இடம்பெற்றது.

(படங்கள்:-சுபேசன், சிவசாந்தன், கஜிந்தன்)

# உணவகம் உடைக்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் திருட்டு

(குப்பிழான்)


ஆடியபாதம் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள உணவகமொன்றில் கடந்த புதன் கிழமை இரவு எரிவாயுவுடன் கூடிய சிலிண்டர் திருடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தற்போதைய மின்வெட்டு மற்றும் எரிவாயுச் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக அண்மைக் காலமாக பிற்பகல்-4 மணிக்கே குறித்த உணவகம் மூடப்படுகின்றது.

மின்வெட்டு அமுலிலிருந்த இரவு-8 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மேற்படி உணவகத்தின் முன்பக்க கேற்றின் பூட்டு உடைத்து அதன் ஊடாக உள்நுழைந்து எரிவாயு சிலிண்டரைத் திருடிச் சென்றுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிவாயு சிலிண்டருக்கும் பரவலாகத் தட்டுப்பாடு காணப்படும் நிலையிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-18)



உலக நீர் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச் சூழல் கழகமும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய உலக நீர் தின விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பாடசாலை அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 130 | 145 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 300 | 500 |
| தக்காளி | 100 | 60 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 100 |
| கோவா | 80 | 60 | 100 | 100 |
| கரட் | 150 | 200 | 240 | 240 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 140 | 180 | 140 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 145 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 180 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 120 | 200 | 80 | 140 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 130 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1300 | 1400 | 1400 | 1600 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 150 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 140 | 140 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 60 | 150 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 50 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரூபாவின் வீழ்ச்சியைத் தடுக்க

# பணச்சபை முறைமையே தீர்வு

## பிரபல அமெரிக்க பொருளியலாளர் ஆலோசனை

(வோஷிங்டன்)

**அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 203 இலிருந்து 290 வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு இலங்கை "பணச்சபை முறைமையை" ஸ்தாபிப்பது அவசியம் என்று அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பொருளியலாளர் ஸ்டீவ் ஹன்க் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்டீவ் ஹன்க், மிகமோசமடைந்துவரும் இலங்கையின் பொருளாதார நிலவரம் தொடர்பில் கடந்த சில வாரங்களாக அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவுகளைச் செய்துவருகின்றார். அவ்வாறு செய்திருக்கும் பதிவொன்றிலேயே அவர் மேற்கண்ட விடயம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

"இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை முகங்கொடுத்திருக்கக் கூடிய டொலர் பற்றாக்குறையும் எரிபொருள் விலையேற்றமும் அந்நாட்டிற்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

எனவே இந்த நெருக்கடியின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கு இலங்கையில் கடந்த 1884 தொடக்கம் 1950 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த "பணச்சபை முறைமை" மீண்டும் உருவாக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுத்தியுள்ளார்.

இலங்கை சிலோன் என்று அறியப்பட்ட காலப்பகுதியில் பணச்சபை முறைமை நடைமுறையில் இருந்ததுடன் 1950 ஆம் ஆண்டில் அம்முறைமை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்கள் யாரும் பசிலை ஏற்கவில்லை

## தேரர் சீற்றம்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் வீட்டுக்கு போனால் அதற்கான முழுப் பொறுப்பினையும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஏற்க வேண்டுமென பெப்பிலியான சுனேத்ராதேவி பிரிவெனவின் பீடாதிபதி கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,பசில் ராஜபக்சவை ஏற்றுக் கொள்ள மக்கள் விரும்பவில்லை, நாளை அவர் எமக்கு என்ன செய்வார் என்பது தெரியவில்லை. நான் சொல்லுவது கடுமையாகக் கூட இருக்கலாம்.

மக்கள் இன்று நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். இந்த அரசாங்கம் தோல்வியடைந்தால் அதற்கான பொறுப்பினை பசில் ஏற்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்திற்கு வரும்போது கூறியதற்கும் அதிகாரம் கிடைத்த பின்னர் நடந்து கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# பண்டிகைக் காலத்திலும் டொலரின் பெறுமதியே

## பொருட்களின் விலையை தீர்மானிக்கும்

(கொழும்பு)

துறைமுகத்தில் சிக்கியுள்ள கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டால் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப்பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 1500கொள்கலன்கள் தற்போது துறைமுகத்தில் சிக்கியுள்ளதாகவும் இதேவேளை, பண்டிகைக்காலங்களில் டொலரின் பெறுமதியே பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: சூரி செவ் 11 இல்
உயரம் :5'8"
தகைமை/தொழில்: சாரதி சொந்த வாகனம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12434

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 24 சூரி 3 செவ் 8இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பல சரக்கு வியாபாரமும் ஆட்டோ ஓட்டு நரும்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12435

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா : சூரி 10செவ் 1 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:நோர்வே
எதிர்பார்ப்பு :சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12436

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்:மகம் 1
கி.பா: சூரி 10 செவ் 1 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA பட்டதாரி சுப்பவைசர் காமன்ஸ் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12440

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா:சூரி 5 செவ் 8
உயரம்:5'6"
தகைமை/தொழில்:வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகத்தர்
தொ.இ:G/9296

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:சூரி 11 செவ் 6இல் உயரம்: 6'
தகைமை/தொழில்:உயர்தரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ:G/9315

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 13 சூரி 8 செவ் 2 இல்
உயரம் :5'1"
தகைமை/தொழில்:BSc Pharmacology, MSc Pharmaceutical science with manag.Stud , Country Coordinator
எதிர்பார்ப்பு :கனடா மட்டும்
தொ.இ:G/9330

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம் :-அச்சுவினி 2
கி.பா: சூரி செவ் 10
தகைமை/தொழில்: ஜமேக்கா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9347

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இயக்கச்சியில் இயங்கி வரும் முருங்கைத் தோட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தோட்ட வேலைகள் செய்வதற்கு தொழிலாளர் ஒப்பந்தக் காரர்கள் தேவை.

- தரமான தொழிலாளர்களை தம் வசம் கொண்டுள்ளோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
- வேலை அளவு, ஒப்பந்த தொகை நேரில் பார்வையிட்டபின் தீர்மானிக்கப்படும்.

Quick Ads

(C-1677)

தொடர்புகளுக்கு
உதவி முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட ஹெரிடேஜ் அக்ரி,
இயக்கச்சி **077 118 8361**



# வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்-கோப்பாய் (வ/து)

## வருடாந்த பொதுச்சபைக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2022.04.02

இடம் :- வலி.கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக மண்டபம் - கோப்பாய்
காலம் :- 2022.04.02 சனிக்கிழமை
நேரம் :- முற்பகல் 9.30 மணி
தலைமை:- திரு.மு.சிவசுந்தரலிங்கம் (சங்கத் தலைவர்)

மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கத் தகைமையுடைய சகல உறுப்பினர்களும் (இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று) மேற்படி கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்.**

(10784)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயபுரம் கிராமத்தில் குடிநீர் இன்றி மக்கள் அவதி

(கண்டாவளை)

**கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா ஜெயபுரம் கிராமத்தில் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்த நிலையில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு பிரதேச சபையின் ஊடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாச்சிக்குடா பகுதியில் உள்ள ஜெயபுரம் நகர் பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பிரதேச சபையினால் குறித்த பகுதிக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும் போதியதாக இல்லை என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-6-315)




# மரக்கடத்தல் முறியடிப்பு



(வவுனியா)

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்று சட்ட விரோதமான முறையில் கடத்திச் சென்ற முதிரை மரக்குற்றிகளை கைப்பற்றிய மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினர் நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இக்கடத்தலில் ஈடு பட்ட ஓமந்தை, கூமாங்குளம், தோணிக்கல் பகுதியை சேர்ந்த மூவரை கைது செய்ததுடன் கடத்தலிற்கு பயன்படுத்திய கப் ரக வாகனம் மற்றும் 10 முதிரை மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டு நெளுக்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணையினை நெளுக்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (4-6-299)

# சட்டவிரோத மணல் அகழ்வு சாரதிகள் பொலிஸாரால் கைது



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட பறங்கியாற்று பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மணலுடன் இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டதுடன்அதன் சாரதிகள் நேற்று முன்தினம் நட்டாங்கண்டல் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.


நட்டாங்கண்டல் குற்றப் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த இரு உழவு இயந்திரங்களும் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வாகன சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்துள்ளதாகவும் பாண்டியன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்திலிருந்து இருந்து வெளியிடங்களுக்கு பொலிஸாரின் ஆதரவுடன் மணல் கொண்டு செல்லப்படுவதாக கடந்த மாத பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பொதுமக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்ச்சியாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-281)

# இ.மி.சபை வாகனம் குடைசாய்ந்தது

## இருவர் காயம்



(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப் பகுதியில் இருந்து யாழ் வீதியினூடக பயணித்த இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான வாகனம் நேற்று முன்தினம் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது மரு த்துவமனையில் அனுமதிக்க ப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொட ர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (4-6-299)

# எரிபொருளுக்காக சென்ற உழவு இயந்திரம் வாய்க்காலுக்குள் தடம்புரண்டது



(முறிகண்டி)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெற்றுக்கொள்ள வந்த உழவு இயந்திரம் வாய்க்காலில் புரண்டு விபத்துக்குள்ளாகியது. அப்பகுதியில் நேற்று காலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவான உழவு இயந்திரங்கள் வருகை தந்திருந்த நிலையில், குறித்த உழவு இயந்திரம் கட்டுப்பாட்டிலிருந்து விலகி அருகில் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் வி[illegible]ளது. (4-6-1[illegible])





வரலாற்று சிறப்புமிக்க நாவாந்துறை குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கூட்டுத்திருப்பலியுடான திருச்சூருவப்பவனி நேற்று சிறப்பாக இடம்பெற்றது.இவ் கூட்டுத் திருப்பலியுடான திருச்சூருவப்பவனியினை யாழ் மறைமாவட்ட பங்கு குருமுதல்வர் ஜெபரட்ணம் அடியார் தலைமையிலான பங்குத் தந்தையினர்கள் ஒப்புகொடுத்தனர்.

(படங்கள் - சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குந்தி வருகிறார் கர்ணா! கவனம்!

குருசேத்திரப் போர் தீர்மானிக்கப்பட்டு விட்டது. போரில் பாண்டவர்களை வெல்ல வைப்பது கண்ணனின் நோக்கம்.

கௌரவர்களுடனான போரில் பாண்டவர்கள் வெல்ல வேண்டுமாயின் கௌரவர் தரப்பில் இருக்கக்கூடிய இருவரைச் சமாளித்தாக வேண்டும்.

அதில் ஒருவர் விதுரன். மற்றையவர் கர்ணன். வில்லுக்கு விதுரன் என்ற பெரும் புகழ் கொண்டவன் விதுரன்

போர்க்களத்தில் அவன் கௌரவர் தரப்பில் இருப்பானாயின், பாண்டவர் சேனை மாண்டுபோகும்.

ஆகையால் குருசேத்திரப் போர்க்களத்தில் விதுரன் இறங்காதிருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடந்தாயிற்று.

ஆம், கௌரவர் சபையில் விதுரன் வில்லை முறித்து போர்க்களம் செல்லேன் எனச் சத்தியம் செய்ததோடு அவனின் அலுவல் முடிந்து போனது.

இனி மாவீரன் கர்ணன் மிகப்பெரும் போர் வீரன். வீஷ்மர் வகித்த படைத் தலைமையை பொறுப்பேற்கும் தகைமை கொண்டவன்.

அதற்கும் மேலாக, நாகாஸ்திரத்தை தன்னுடன் வைத்திருப்பவன்.

போர்க்களத்தில் நாகாஸ்திரத்தைக் கர்ணன் ஏவுவானாயின், பாண்டவர்கள் மீண்டெழுவது முடியாத காரியம்.

இங்குதான் கண்ணன் குந்திதேவியை கர்ணனிடம் அனுப்பி, நீ என் மகன் என்ற செய்தியைக் கூறவைக்கின்றான்.

கூடவே, பாண்டவர்களைக் கொல்லாதிருக்க வேண்டும் என்ற வரத்தையும் குந்தி பெற்றாகிறாள்.

பாவம் கர்ணன். பாண்டவர்களைக் கொல்லாதிருப்பானாயின், தன்னுயிர் பிரியும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தவிர, தான் பெற்று ஆற்றிடை அனுப்பி வைத்த பிள்ளைக்கு நடந்தது என்ன? என்பதை ஒருபோதும் அறிய விரும்பாத அன்னை குந்திதேவி பாண்டவர்களுக்கு ஆபத்தென்றவுடன் கர்ணனைச் சந்தித்து வரம் பெற்றாள் எனில்,

குந்தியின் செயல் கொடுமையானது. சந்தர்ப்பவாதம் கொண்டது.

இதை நாம் கூறும்போது, மகாபாரத இதிகாசம் இப்போதும் நடந்து கொண்டே இருக்கிறது என்பதை நீங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள்.

ஆம், புலம்பெயர் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பு எதற்கானது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

நாட்டின் பொருளாதாரம் கந்தறுநிலைக்கு வந்தபோது, தனது ஆட்சியைக் கவிழ்க்க அரச பங்காளிக் கட்சிகளே களத்தில் இறங்கியுள்ளபோது, தன்னையும் ஆட்சியையும் காப்பாற்ற புலம்பெயர் தமிழர்கள் தேவை யாக உள்ளனர்.

உண்மை, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்த அழைப்பை அவர் விடுத்திருந்தால், அதன் பொருள் உன்னதமானது.

ஆனால் அது நடக்கவில்லை. மாறாக, நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் இலங்கைக்கு வருவதையே நிறுத்துகின்ற அளவில் நிலைமை உருவானது.

ஆனால் இப்போது புலம்பெயர் தமிழ் உறவுகளே வருக! வந்து வடக்கு–கிழக்கில் முதலிடுக! என்றால் அதனைக் கர்ண காதையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகிறதல்லவா?

### இலங்கை தொடர்பான

# சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பான அதன் அறிக்கையை (IMF Article IV) வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், நாட்டில் பண வீக்கம் அதிகரித்துச் செல்வதையும் பொருட்களுக்கான உள்நாட்டுத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு,

கோவிட்-19 தொற்றானது பொருளாதாரத்தை கடுமையாக பாதித்தது. இதனால் சுற்றுலா வருமான இழப்பு ஏற்பட்டது. நாட்டை முடக்கி வைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

தொற்றுநோய்க்கு முந்தைய வரிக் குறைப்புக்கள் மற்றும் கோவிட்-19 இன் தாக்கம் போன்றவை 2020 மற்றும் 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்திற்கும் அதிகமான நிதிப் பற்றாக் குறைக்கு வழிவகுத்தது.

அத்துடன் 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 119 சதவீதமாக பொதுக் கடனில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டது. சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை இலங்கை இழந்தது.

2020 ஆம் ஆண்டில், சர்வதேச கையிருப்புகள் மிகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியதோடு, இலங்கை மத்திய வங்கியால் (CBSL) அரசாங்கத்திற்கு பாரிய அளவிலான நேரடிக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் விரிவடைந்து வரும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அந்நியச் செலாவணி (FX) பற்றாக் குறைக்கு வழிவகுத்தது.

அதே நேரத்தில் உத்தியோகபூர்வ நாணய மாற்று விகிதம் ஏப்ரல் 2021 முதல் நடைமுறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணவீக்கம் அதிகரித்து வருவதுடன், டிசம்பர் 2021 இல், அது இரு இலக்கத்தை அடைந்துள்ளது.

அத்துடன் இறக்குமதியில் பணவீக்கம் பிரதிபலிப்பதுடன், விநியோகத் தட்டுப்பாடு மற்றும் தளர்வான நாணயக் கொள்கையின் மத்தியில் பொருட்களுக்கான உள்நாட்டுத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

இதனை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக ஒரு சில விடயங்களை சர்வதேச நாணய நிதியம் குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஞா)

### பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து

# யாழ்.மாநகர அமர்வில் கண்டனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் மகிந்த ராஜபக்ச கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புத் தெரிவித்து நடாத்திய போராட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸாருக்கு எதிராக யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபனால் யாழ்.மாநகர சபை அமர்வில் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

யாழ்.மாநகர சபை அமர்வு மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபனால் சபையில் குறித்த கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அதனை யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அதனை ஏற்றுக்கொண்டு சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா-18)

# கொரோனா; 2 பலி

நாட்டில் மேலும் 2 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,454 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

# எரிபொருள் விலை அதிகரிக்கப்படமாட்டாது

### எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


எரிபொருள் விலை தற்போதைக்கு அதிகரிக்கப்படமாட்டாது என எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து வகை பெற்றோல்களையும் லீற்றர் ஒன்றின் விலையை 49 ரூபாயினால் அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஞா)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## எப்போது பாவ மன்னிப்பு கிடைக்கும்?



பாவங்களை செய்வதால் பலர் பலவிதமான இக்கட்டுகளுக்குள் தள்ளப்படுகின்றனர்.வழக்குகள், சண்டைகள், வேலை இழப்பு உட்பட பல சிக்கல்கள் இதில் அடக்கம். இவற்றில் இருந்து விடுபடுவதற்கு மேலும் பல பாவ வழிகளையே பலர் மேற்கொள்கின்றனர். செய்த தவறை ஒப்புக் கொண்டு, தண்டனையை ஏற்றுக் கொள்ளாமல், ஏதாவது பொய்யைச் சொல்லி தண்டனையில் இருந்து தப்பிக்கப் பார்க்கின்றனர். அல்லது, வேறு யார் மீதாவது குற்றம் சுமத்தி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். சிக்கல்கள் வரும் நேரத்தில் இறைநம்பிக்கையும் வந்துவிடுகிறது. 'கடவுளே இந்த சிக்கலில் இருந்து என்னைக் காப்பாற்றும்' என்று கதறுகின்றனர்.

இந்த ஜெபத்தை இறைவன் கேட்பாரா?

இந்தக் கேள்விக்கு இயேசுவால் பார்வை பெற்ற ஒரு குருட்டு பிச்சைக்காரன் சொல்லும் பதிலை யோவான் 9.31 வசனத்தில் வாசிக்கலாம். அதில், "பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை" என்று கூறப்பட்டுள்ளது. பாவிகளை மீட்பதற்காகத்தான் உலகிற்கு மனிதனாக இயேசு வந்தார்.

என்றாலும், பாவத்தை உணராமல் தொடர்ந்து அதில் நீடித்து இருந்து கொண்டு செய்யும் ஜெபங்களை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. பாவத்தை விட்டு மனம் திருந்தி வந்தால் மட்டுமே, அவரால் அவன் ஏற்றுக்கொள்ளப்படுகிறான்.

எனவே சிக்கலில் இருப்பவர்கள் " நான் இனி எந்த நிலையிலும் பாவம் செய்ய மாட்டேன். பாவத்தினால் வந்த தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். உமக்கு விருப்பம் இருந்தால் அதில் இருந்து எனக்கு மீட்பு தாரும். மீண்டும் பாவம் செய்யாமல் இருக்க பலம் தாரும் " என்று கேட்டால், நிச்சயம் அவரால் அந்த ஜெபம் கேட்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023



(உத்தரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை)

**பெயரின் முதல் எழுத்துக்கள்: பா, பி, பு, பூ, ண, ட, பே, போ உள்ளவர்களுக்கும்**

**எட்டில் வருகிறது ராகு எதிலும் கவனம் இனி தேவை**

**கன்னி இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் 8 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அதே நாளில் கேது பகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் இருந்து 2ஆம் இடமான வாக்கு, தனம், குடும்பம் என்று சொல்லக்கூடிய இடத்திற்கு வரப்போகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அந்த இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

# எட்டில் வருகிறது ராகு எதிலும் கவனம் இனி தேவை

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### அஷ்டமத்தில் ராகு, தன ஸ்தானத்தில் கேது

ராகு பகவான் வரப்போவது, 8 ஆம் இடம் என்பதால் ஓரளவு உங்களுக்கு பய உணர்ச்சி வரலாம். இருந்தாலும் 'மறைந்த ராகுவால் நிறைந்த தன லாபம் கிடைக்கும்' என்பது பழமொழி. எனவே பொருளாதாரத்தில் பற்றாக் குறை ஏற்படாது. வருமானம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து வந்து கொண்டேயிருக்கும். ஆனால் விரயங்கள் அதற்கு முன்னதாகவே வந்து காத்திருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் மாற்றங்களைச் சந்திப்பீர்கள். கூட்டாளிகள் மாற்றம், குடியிருக்கும் வீட்டில் மாற்றம் ஏற்படும். போட்டிக்கு மத்தியில் தொழில் முன்னேற்றம் இருக்கும். ஆனால் போதுமான வருமானம் இல்லையே என்ற ஏக்கம் உண்டாகும். ராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை உங்களுக்கு அனுகூலம் தரும் தலங்களைத் தேர்ந்தெடுத்து, யோகபலம் பெற்ற நாளில் செய்தால் அதன் கடுமை குறைந்து நன்மை ஏற்படும்.

### சூரியன் சாரத்தில் ராகு சஞ்சாரம்(21.3.2022 முதல் 22.5.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் விரும்பும் விதத்தில் அமைவது அரிது. நட்பு பகையாகலாம். நாணயத்தை காப்பாற்ற இயலாது. அவ்வப்போது குணம் மாறி பல காரியங்களைச் செய்ய இயலாமல் போகலாம். சேமிப்பு கரையும், செலவுகள் அதிகரிக்கும். அதிகார வர்க்கத்தினரின் பகையால் சில காரியங்கள் ஸ்தம்பித்து நிற்கலாம். ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

### சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம்(23.5.2022 முதல் 28.1.2023 வரை)

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். வாழ்க்கைத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். வாய்ப்புகளை உபயோகித்துக் கொள்ள முன்வருவீர்கள். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால் பாக்கிய ஸ்தானத்திற்குரிய கிரகம் எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தும். கடந்த ராகு - கேது பெயர்ச்சியில் நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தும் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.


### கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம்(29.1.2023 முதல் 7.10.2023 வரை)

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது, குடும்ப ஒற்றுமை கொஞ்சம் குறையலாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உடல் நலத்திலும் சிறுசிறு பாதிப்புகள் தோன்றி மருத்துவச் செலவை ஏற்படுத்தும். வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கலாம். கொடுக்கல்- வாங்கலில் மாற்றங்கள் உண்டு. சங்கிலித் தொடர்போல கடன் சுமை ஏற்படலாம். 'சகஜ நிலைக்கு பொருளாதாரம் எப்போது வரும்' என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. 'தெய்வ வழிபாடுகளை திருப்தியாகச் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் இக்காலத்தில் உங்களுக்குத் தடைகளை ஓரளவு அகற்றும்.

### குரு சாரத்தில் கேது சஞ்சாரம்(21.3.2022 முதல் 25.9.2022 வரை)

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். வீடுகட்டும் முயற்சி கைகூடும். பஞ்சாயத்துக்களில் இருந்த தாமதங்கள் அகலும்.

புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்காது. வெளிநாடு அல்லது வெளி




மாநிலங்கள் சென்று உத்தியோகம் பார்க்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

### ராகு சாரத்தில் கேது சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். அளவிற்கு மீறிய விரயங்கள் ஏற்படும். அதுமட்டுமல்லாமல் செலவுகளைச் சமாளிக்க இயலாமல் கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம். குடும்பத்தில் அனுசரிப்பு குறையும். உடன் இருப்பவர்கள் பகையாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பொருளாதார உதவி கிடைப்பது போல் தோன்றி கைநழுவிச் செல்லலாம்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நெருக்கடி நிலை அதிகரிக்கும். கேட்ட சலுகைகள் கிடைக்காது. மேலதிகாரிகளின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடும். உடன்பணிபுரிபவர்களால் வீண்பழிகள் ஏற்படும். மனக்குழப்பம் அதிகரிக்கும்.

### செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். எதைச் செய்தாலும் குடும்பத்தினர் குற்றம், குறை காண்பர். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும் என்பதால் உணவில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. தகுந்த ஓய்வும், உடல் நலத்தைச் சீராக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணியாளர் தொல்லை அதிகரிக்கும். துணிந்து செயற்பட முடியாத சூழ்நிலை உருவாகும். எதிர் காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் இரண்டு முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது. ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். இதனால் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் உண்டு. புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். 22.4.2023 அன்று மேஷ இராசிக்குச் செல்லும் குரு, அஷ்டமத்து குருவாக சஞ்சரிப்பதால் மிகுந்த கவனத்துடன் செயற்படுவது நல்லது.

### சனிப் பெயர்ச்சிக் காலம்

16.3.2023 அன்று கும்ப ராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்திற்கு வரும் சனிபகவான் அற்புதமான பலன்களை வழங்கப் போகிறார். தொழில் உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். விபரீத ராஜயோகம் செயற்படப் போவதால் இனிய பலன்கள் ஏராளமாக வந்துசேரும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தடைப்பட்ட ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் வந்து சேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சி, அஷ்டமத்து ராகுவாக அடியெடுத்து வைப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். சுபச் செலவுகள் அதிகரிக்கும். எந்தப் பொறுப்பையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்க இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். மேலும் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. புதன்கிழமை விரதமும், பெருமாள் வழிபாடும் நன்மை தரும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராஜக அரசை...

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி கொழும்பு - இரத்மலானையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் அரசாங்கத்திற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ள போதிலும், அரசாங்கத்தை அகற்றுவதற்கு இந்த நாட்டு மக்கள் இவ்வளவு காலம் பொறுக்க மாட்டார்கள்.

தற்போதைய அராஜக அரசாங்கத்தை தோற்கடித்து நாட்டை கட்டியெழுப்பக்கூடிய குழுவொன்றுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றார். (ஞா)

## அரசை எத்தரப்...

இல் 7.6 வீதமாகக் குறைவடைந்தமைக்கு நல்லாட்சி அரசே காரணம்.

தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றபோதும் அரசையும் நாட்டையும் வீழ்ச்சியுறச் செய்வதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தற்போதைய சவால் நிலையை நாம் நிச்சயம் எதிர்கொள்வோம்" என்றார். (ஞா)

## ராஜபக்ஷ அரசு...

ராஜபக்ஷ அரசு கவிழும் தருணம் வந்துள்ளது என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"இந்த அரசை வீழ்த்துவதற்கு இரு முனைத்தாக்குதல் தொடுக்கப்படும்.

ஒன்று பாதீட்டை தோற்கடிப்பதன் மூலம் அரசை கவிழ்க்கலாம். இரண்டாவது, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரலாம்.

தற்போதைய அரசு பெரும்பான்மையை இலகுவாக இழக்க நேரிடும். ஆளுங்கட்சி வசம் தற்போது 123 ஆசனங்களே உள்ளன. எனவே, இன்னும் 12 பேர் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டால், அரசு பெரும்பான்மையை இழந்துவிடும்.

தற்போதைய சூழ்நிலையில் 12 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். எனவே, உரிய தருணம் வரும்போது எமது பலத்தைக் காட்டுவோம்" என்றார். (ஞா)

## பிரிவினையை...

படுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்டோர் அமரபுர நிக்காயவின் மாநாயக்க தேரர், தொடம்பஹல சந்ரசிறி தேரரை நேற்று சந்தித்து ஆசி பெற்றுள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தமிழ் மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு எந்த எதிர்ப்பும் வெளியிடப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

எனினும் தற்போதைய அரசாங்கத்துக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தங்களது பிரிவினைவாத நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்தால் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ஞா)

## வாகனத்தால்...

னத்தால் மோத முயன்ற நிலையில் பாதிக்கப்பட்டவர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மாலை 7 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. படுகாயம் அடைந்த நிலையில் இரத்தக் காயத்துடன் காணப்பட்ட நபர் ஒருவரை வாகனம் ஒன்றில் மூவர் ஏற்றிச் சென்றனர்.

அந்த வாகனத்திலிருந்து காயத்துடன் காணப்பட்ட நபர் தப்பி ஓடுவதற்கு முயன்று வீதியில் குதித்து ஓடியுள்ளார். இரண்டு தடவைகள் அவர் முயன்று இரண்டாவது தடவை குதித்தபோது அந்த நபரை கடத்தல்காரர்கள் என்று நம்பப்படும் நபர்கள் வாகனத்தை செலுத்தி அவர் மீது மோதியுள்ளனர்.

இச்சம்பவத்தினால் குறித்த நபர் படுகாயம் அடைந்துள்ளார். அதேவேளை வாகனமும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தை அடுத்து வாகனத்தில் வந்த மூவரும் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ஞா-100,316)

## அமைச்சப் பதவி...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்குமாறு தெரிவித்திருந்தார்.

அப்படியானல் அவர்கள் முன்னுதாரணமாக தங்களது அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்தால் நான் பதவி விலகத் தயார் என அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## சிங்கள பேரின...

அறியாமை வேறு இருக்கவே முடியாது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அவர் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் உள்ளதாவது. கூட்டமைப்புடன் நேற்று முன்தினம் நிகழ்ந்த உயர்மட்ட பேச்சுவார்த்தைகளில், அரசாங்கத் தரப்பினால் மேலோட்டமான முறையில் வாக்குறுதிகள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழர் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் சகல அத்துமீறல்களும் அடாவடி நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்படாத வரையில், இந்த வாக்குறுதிகள் எல்லாம் விரைவில் அர்த்தம் அற்றுப் போய்விடும். அத்துடன், அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதிலும், நீண்ட பல வருடங்களாக சிறைக்குள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை, கால தாமதம் செய்யாமல் விரைவாக விடுவிப்பதிலும் அரசாங்கத்திற்கு எந்த தடையும் இருக்க முடியாது.

இந்த விவகாரங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே அரசாங்கத்திடம் எதிர்பார்க்கப்படுகின்றன. அடுத்துவரும் ஒரு சில வாரங்களில் தனது வாக்குறுதிகளின் விடயத்தில் அரசாங்கம் தன்னைத்தானே நிரூபித்தாக வேண்டும். காலத்திற்கு காலம் சிங்கள ஆட்சியாளர்கள் தமது உடனடி அரசியல் தேவைகளுக்காக வழங்கிச் சென்ற வாக்குறுதிகள் எல்லாம் தமிழர் மனங்களில் இப்பொழுதும் பசுமையாகவே உள்ளன என்றுள்ளது. (ஞா-104)

## மின்...

தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாவனெல்லை பாமினிவத்தை மயானத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கியதில் சுமார் 25 பேர் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவனெல்லை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லசந்த களுஆராச்சி தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)


பெண்களுக்கான
அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Beauty & Hair Dressing
முக அலங்காரம், மணப்பெண் அலங்காரம்
கேக் ஐசிங் வகுப்புகள்
ஆரி எம்ப்ராய்டரி வகுப்புகள்
தையல் வகுப்புக்கள்
வெளிநாடு செல்ல இருக்கும் பெண்கள்,
சுயதொழில் - வாய்ப்பை எதிர்பார்ப்போர்,
A/L பரீட்சை எழுதிய மாணவிகள்,
உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கானது
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள்
முதலில் பதிவு செய்யும் மாணவர்கள் 50% கட்டணக்கழிவினை பெற்றுக்கொள்ள முடியும்
BCSS
HOTLINE-0761354500
பயிற்சிநெறி இடம் பெறும் இடங்கள்
• யாழ்ப்பாணம் - No. 111, கன்னாதிட்டி வீதி
• நெல்லியடி • கிளிநொச்சி
(C-4067)


### தன நிதானய

திகதி - 2022.03.26
சீட்டிழுப்பு இலக்கம் - 748
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 15 38 46 73
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### மஹஜன சம்பத

திகதி 2022/03/26
சீட்டிழுப்பு இலக்கம் 4718
ஆங்கில எழுத்து: P
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 0 1 5 9 0 8
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 26/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1066
வெற்றி எழுத்து: Y
சுப்பர் இலக்க: 16
வெற்றி இலக்கங்கள்: 06 53 75 77

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 26/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1228
வெற்றி இலக்கங்கள்: கடகம் 6 7 6 0 2 8
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1521
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.03.2022
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,652,980
வெற்றி இலக்கங்கள்: 06 41 63 70
ஆங்கில எழுத்து: P
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3856
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 26.03.2022
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,588,280
வெற்றி இலக்கங்கள்: 28 55 60 61
ஆங்கில எழுத்து: O
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1695
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 26.03.2022
தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: J 03 06 24 39
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 54,698,805/-
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி இலக்கங்கள்: 07 26 29 58
கும்பம்
திகதி 26.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3407
வர்ணம் இளநீலம்
8371 127
வெற்றி டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,412,600/-

### 12 வாசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 32 04 06 10 24
சுப்பர் இலக்கம்: 32
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 226,081,045/-
சீட்டிழுப்பு வாரம் 871
வர்ணம் சிவப்பு
திகதி 2022.03.26
சனிக்கிழமை
தொலைபேசி: 011-2 333 545-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2022-03-26
வெற்றி வாரம் : 497 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,135,756/-
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 34 25 53
விதி எண்: 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,983,140/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10,261,144/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

இலங்கையில் முன்னணி வகிக்கும் சர்வதேச நிதி நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**Wealth Planning Manager**

**தகைமை**

- O/L, A/L சித்தி
- ஏதாவது ஒரு துறையில் 1 வருட முன் அனுபவம்
- சிறந்த தொடர்பாடல் திறன்
- முகாமைத்துவ பண்புகள்

**அனுகூலங்கள்**

- அடிப்படைக் கொடுப்பனவு
- மேலதிக இதர கொடுப்பனவுகள்
- இலவச வெளிநாட்டு சுற்றுப்பயணம்
- மருத்துவ காப்புறுதி
- வீடு மற்றும் வாகன கடன் வசதிகள்
- திறமைக்கேற்ப பதவி உயர்வுகள்



(10795)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**077 744 4450, 074 227 9845**

## வேலையாட்கள் தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு கீழ்க் காணப்படும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை

**வயதெல்லை 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்(பெண்கள்)**

- அனுபவமுள்ள களஞ்சிய காப்பாளர் (STORE KEEPER)
- அனுபவமுள்ள, பயிற்சி பெற்ற சிறுவர் பராமரிப்பாளர்கள்
- சமையலாளர்
- அலுவலக உதவியாளர் (குறைந்தது A/L வகுப்பில் 3 பாடம் சித்தி, Computer அனுபவம்)
- அனுபவமுள்ள பயிற்சிபெற்ற மருத்துவ உதவியாளர்
- உளவளத் துணையாளர் (உளவளத் துறையில் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்) - ஒரு வருட அனுபவம் உள்ளவர்.
- கணனி ஆசிரியர் (Computer Teacher)
- விளையாட்டு பயிற்சியாளர் (ஆசிரியர்)

**ஆண்**

- முச்சக்கர வண்டி ஓட்டுனர்

உடன் தொடர்புகொள்ளவும்!!!!!!!!!!

தகுந்த சம்பளம் வழங்கப்படும். (நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(10791)

**071 535 4500 | 071 535 4501** பாரதி சிறுவர் இல்லம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

## மக்களுக்கு...

காலத்தில் நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க தயாராக இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஞா)

## வீடு விற்பனைக்கு

யாழ். பழைய பூங்கா வீதி, இராஜசிங்கம் றோட்டில் அமைந்துள்ள நில. பர. 2 குளி 5 கொண்ட காணியில் 4 அறைகள், சமையலறை, குளியலறை மற்றும் வெட்டுக் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (10776)

**077 229 4985**
**074 046 1090**

## மணமகள் தேவை

1967இல் பிறந்த பிரான்ஸ் நாட்டுப் பிரஜாவுரிமையுள்ள திருமணமாகாத நற்பண்புள்ள குருகுல மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் - கேட்டை 4ம் பாதம் செவ்வாய்/கேது 12இல், லக்கினத்தில் சந்திரன், சனி 5இல் சூரியன், புதன், வியாழன் 9இல், மணமகன் இலங்கை வந்து மணமகளை அழைத்துச் செல்வார். தாரமிழந்தவர்களும் கருத்தில் கொள்ளப்படுவர். (ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு தொலைபேசி இலக்கம் தவறுதலாக என்னால் தரப்பட்டமைக்கு மனம் வருந்துகின்றேன்.) (10800)

தொடர்பு:- **075 253 0305** சகோதரன்

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, $A_1$ UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

$A_1$ UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(10241, 10628)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 2 பரப்பு, 3 1/2 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு. (10770)

தொடர்பு

**076 675 7518**

## சோபா Cleaning

புதிய பொருட்களுக்கு அதிக பணம் செலவழிக்க வேண்டாம்! உங்கள் சோபா, அலுவலக மற்றும் சாப்பாட்டு நாற்காலிகள் மற்றும் மெத்தைகளை சுத்தம் செய்ய **077 224 2787** என்ற எண்ணிற்கு எங்களை அழைக்கவும். (10790)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வாகன ஓட்டுனரும் (Light Vehicle) விற்பனை பிரதிநிதியும் (A/L, முன்அனுபவம்) தேவை. (யாழ். நகரில் இருந்து 5 km இற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.) (10778)

**077 267 4194**
**077 604 3681**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கந்தர்மடம் சந்தி மணத்தறை வீதியில் அமைந்துள்ள 3 பரப்பு 4.55 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (10774)

**077 229 4985**
**076 178 7326**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered at a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 337

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 27.03.2022 தொலைபேசி : 021 222 3378



## வெளி நின்றவர் உள்ளே

## உள்ளிருந்தவர் வெளியே

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கந்தர்மடம் சந்தியில நிண்ட மிகப் பழைமைவாய்ந்த அரச மரம் தறிபட்டிட்டுது.

நீண்ட நெடுங்காலம் நிழல் பரப்பி நிண்ட அந்த அரச மரத்தாலதான் கந்தர்மடச் சந்தியால நல்லூருக்கும் தட்டாதெரு சந்திக்கும் செல்லுகிற வீதிக்கு அரசடி வீதி என்று பெயர் வந்தது.

அந்த அரச மரத்திற்கு நன்றி தெரிவிக்க வேணும் என்று கூற, ஆலடியில இருந்த அனைவரும் எழுந்து நின்று நன்றி செலுத்தி அமர்ந்தனர்.

**மூப்பர்:** அதுசரி சாத்திரியரைக் காணவில்லை என்ன சங்கதியோ!

**விதானையார்:** காஸ் முடிஞ்சு போச்சுது எண்டு சொன்னவர். அதுதான் எங்கயும் போய் வரிசையில நிற்கிறார் போல. இவ்வாறு விதானையார் கூறி முடிக்க அந்நேரம் பார்த்து சாத்திரியாரும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

(இந்தா! சாத்திரியாருக்கு ஆயுள் நூறு. கங்காணி கார்த்திகேயன் கூறினார்.)

**சாத்திரியார்:** என்ர ராசா இந்த நாட்டில நூறு வயது மட்டும் வாழலாமோ. எல்லாத்துக்கும் தட்டுப்பாடு. இந்த இலட்சணத்தில நூறு வயது மட்டும் இருந்தால் புழுத்துத்தான் சாக வேண்டி வரும்.

**மூப்பர்:** அதுசரி சாத்திரியார் காஸ் எடுத்திட்டியளோ.

**சாத்திரியார்:** அதையேன் கேட்கிறியள். எஸ்.வி.எம். இட்ட போங்க எண்டு சொல்லிச்சினம். பிறகு டி.எஸ். ஒவ்விஸில வாங்கலாமெண்டு கூறிச்சினம். இரண்டு இடத்திற்கும் போய் கால்கடுக்க நிண்டதுதான் மிச்சம். காஸ் கிடைக்கல்ல.

**பண்டிதர்:** அதுசரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தவர்கள்ல்லோ என்ன நடந்ததாம்.

**விதானையார்:** அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு, நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் அலுவலைப் பார்க்கிறது எண்டு ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

**வாத்தியார்:** அட, அப்ப, நாற்பது ஆண்டு கால இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு கிடைச்சிட்டுது...! தமிழ் அரசியல் கைதிகளுக்கும் விடுதலை வரப் போகுது போல. அப்ப இனி காணாமல் போனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் சரிதானே.

**விதானையார்:** உண்மையில சம்பந்தர் ஐயாவைப்போல ஒரு அரசியல் விற்பன்னரை உலகத்தில காண முடியாது.

**பண்டிதர்:** இலங்கை அரசாங்கத்திற்கு உலக நாடுகளும் ஐ.நா. சபையும் கொடுக்கக் கூடிய அழுத்தத்தை உந்தச் சந்திப்பு வெட்டிப் போட்டுது பாத்தியளோ. இனி சம்பந்தர் ஐயாவின் கொழும்புச் சொத்துகளுக்கு ஒரு விக்கினமும் இல்லை.

**கங்காணி:** அங்க மல்வத்த பீடாதிபதியையும் அஸ்கிரிய பீடாதிபதியையும் சந்திச்சு உந்த அரசாங்கத்தை அகற்றுவோம் எண்டு அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சொல்லிப் போட்டினம். உவையள் இப்பதான் ஜனாதிபதியைச் சந்தித்து அரசியல் தீர்வு பற்றிக் கதைச்சிருக்கினம். எப்படி எண்டு பார்த்தியளோ எங்கட இராஜதந்திரத்தை.

**வாத்தியார்:** இதுகளும் ஒரு வகையான இராஜதந்திரம்தான். ஆனால் அந்த இராஜதந்திரத்தால தமிழ் மக்களுக்கு உலை வைபடுகுது என்பதுதான் உண்மை. இருந்தும் இதுபற்றி எல்லாம் எங்கட தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

ஐ படத்தில வாற டாக்குத்தரை விக்கிரம் நம்புறாரல்லோ. அது மாதிரித்தான் எங்கட அரசியல் தலைவர்களை எங்கட தமிழ்ச் சனங்கள் நம்புகினம்.

**மூப்பர்:** இப்படியொரு பொருளாதார நிலை வந்திராவிட்டால் சம்பந்தர் ஐயாவை ஜனாதிபதி கோட்டாபய சந்தித்திருப்பாரோ.

**சிறாப்பர்:** அது மட்டுமல்ல கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி கூட்டின சர்வகட்சி மாநாட்டில சம்பந்தர் ஐயா பங்கேற்காமல் விட்டிருந்தால் உந்தச் சந்திப்பு நடந்திராது.

**விதானையார்:** சிறாப்பர் நீங்கள் சொல்லுறது ஒரு பக்கத்தில சரியாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை சம்பந்தருடன் சந்திப்பை நடத்துவதன் மூலம் தனக்கொரு சாதகமான களநிலையை சர்வதேசத்தில ஏற்படுத்த முடியும் எண்டு ஜனாதிபதி கோட்டாபய கருதியிருக்கிறார்.

அதனால் சர்வகட்சி மாநாட்டில சம்பந்தர் பங்கேற்காமல் விட்டிருந்தாலும் ஜனாதிபதியுடனான சந்திப்பு நடந்திருக்குமெண்டுதான் நான் நினைக்கிறன்.

**பண்டிதர்:** அப்ப அரச பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் அதில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க மாட்டுதோ.

**விதானையார்:** பண்டிதர் ஐயா என்னெண்டு பங்கேற்கிறது. ஜனாதிபதிதானே சொல்லிப் போட்டார் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு, நீதிமன்ற வழக்கின் மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு முடிவு இப்படிச் சொன்ன ஜனாதிபதியின் அரசிற்கு எதிராக வாக்களிக்கலாமோ என்ன.

**வாத்தியார்** ஏதோ தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந் தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## ஜனாதிபதியைச் சந்தித்ததால் எங்களுக்கு என்ன இலாபம்?

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனில் மூழ்கும் கண்ணீர்த் தீவு

ஒரு காலம் யுத்தத்தினால் நெருக்கடிபட்டுக்கொண்டிருந்த இலங்கை, இப்பொழுது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது. 'யுத்தம் முடிந்துவிட்டது. இனி வருவது நல்ல காலம்தான்' என்று நம்பியவர்களின் கனவிலே மண் விழுந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எல்லாத் துறைகளையும் பாதித்திருக்கிறது. சாதாரண சமையலுக்கான எரிவாயுவில் தொடங்கி மின்வெட்டு வரை நீண்டுகொண்டிருக்கிறது. தினமும் ஏழு, எட்டு மணி நேரம் மின்வெட்டு. எரிபொருள்களை நிரப்புவதற்காக வாகனங்கள் நீண்ட நேரம், நீண்ட வரிசையில் காத்திருக்கின்றன. இதனால் பொருள் விநியோகம், பொதுப் போக்குவரத்து எல்லாமே முடங்கும் அபாய நிலை உருவாகியுள்ளது. பள்ளி மாணவர்களுடைய பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கே தாளில்லை என்ற நிலை. தாளில்லாத காரணத்தினால் தேர்வுகளை ஒத்திப்போட வேண்டியுள்ளதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். இதைவிட உணவு, மருந்து, உடை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் கட்டுப்பாடில்லாமல் ஏறிக்கொண்டிருக்கிறது.

விலையேற்ற அறிவிப்பு வருவதற்கு முன்பு பொருட்கள் தலைமறைவாகிவிடுகின்றன. எல்லாமே பதுக்கப்படுகின்றன. பதுக்கலைக் கட்டுப்படுத்துவதற்கு வழியில்லை. பதுக்குவதன் நோக்கமே செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி, தேவையை அதிகரிப்பதாகும். இதன் மூலம் ஒரு சிறிய தரப்பு பெரும் இலாபம் சம்பாதிக்கிறது.

'ஒவ்வொரு நாளும் கெட்ட சேதிகளே கிடைக்கும் காலமாகிவிட்டதா?' என்று எண்ணும் அளவுக்குத் தினமும் அதிர்ச்சியான தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த அளவுக்கு யுத்த காலத்தில்கூட நிலைமை மோசமடைந்திருக்கவில்லை.

இந்த மாதிரியான சூழலில் அரசாங்கமே மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில், பொறுப்பில், கடமையில், வழிமுறையைக்காண்பதில் இருக்க வேண்டும். ஆனால், அரசாங்கமோ என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்றத்தில் உள்ளது. சரியாகச் சொன்னால், அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது எனலாம். இதை நிரூபிக்கின்ற விதமாகவே நிதி அமைச்சர் உட்பட அரசாங்கத் தரப்பில் உள்ள அத்தனை பிரதானிகளின் பேச்சும் குழப்பமானதாக உள்ளது.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை எப்போது தீரும் என்பதற்கு இப்பொழுது பதிலளிக்க முடியாது. ஆனால், அரசாங்கம் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது" என்று கூறியிருக்கிறார், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ.

ஆனால், இந்தப் பொருளாதார நெருக்கடி எப்படி ஏற்பட்டது? இதைத் தீர்ப்பதற்கான உண்மையான, சரியான வழிமுறைகள் என்ன? இப்பொழுதுள்ள உண்மையான நிலைமை என்ன என்பதைக் குறித்தெல்லாம் விளக்க அரசாங்க மட்டத்திலும் சரி, அரசுக்கு வெளியே எதிர்க்கட்சிகள், அரசியல் தலைவர்கள் தொடக்கம் நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் உள்ள பொருளியல் நிபுணர்கள் வரையில் யாருமே தயாரில்லை. இதைப் பற்றிப் பேசுவதற்குப் பலருக்கும் அச்சம்.

1970 இன் முற்பகுதியில் தென்னிலங்கையில் ஜே.வி.பியின் கிளர்ச்சி தொடங்கியது. அதிலே இளைய தலைமுறையினர் ஆயிரக்கணக்கில் போராட்டக்களத்திலே குதித்தனர். அவர்களை அடக்குவதற்கென்று அரச படை எந்திரம் பெருப்பிக்கப்பட்டது. முப்படைகளுக்குமான ஆட்சேர்ப்புத் தொடக்கம் நிதி ஒதுக்கீடு வரை தேச வளம் பெருவாரியாகச் செலவானது.

அதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம், மறுபடி 1987இல் [illegible] எழுச்சியடைந்த ஜே.வி.பியின் போராட்டம் என கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல், நாடு அரசியல் கொந்தளிப்புகளால் அலைக்கழிக்கப்பட்டது, அழிந்தது. அரசியல் பொருளில் விளக்குவதானால் முழுமையான உள்நாட்டு நெருக்கடியால் - போரினால் - சீரழிந்தது.

அதற்கு முன், நானூறு ஆண்டுகளுக்கு மேலாக அந்நியரால் சுரண்டப்பட்ட நாடு இலங்கை. சுதந்திரம் பெற்ற 20 ஆண்டுகளுக்குள்ளேயே தொடங்கிய அரசியற் கொந்தளிப்பும் நெருக்கடியும் 50 ஆண்டுகளுக்கும் மேலும் நீடித்தது என்றால் விளைவு எப்பிடியிருக்கும்?

மறுபக்கத்தில் கேள்விக்கிடமில்லாத நிறைவேற்று அதிகாரமுள்ள ஆட்சிமுறையில் ஜனாதிபதிக்குக் கிடைத்த அதிகாரத்தின் காரணமாக, நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய பல வளங்கள் வீணடிக்கப்பட்டன.

இந்தத் தவறுகளை மறைப்பதற்கு இனவாதத்தையும் போரையும் அரசு தொடர்ச்சியாகப் பயன்படுத்தியது. மறுவளத்தில் உள்நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை மறுதலிக்கும் விதமாக நவதாராளவாதத்தை அனுமதித்தது.

அதனால், இலங்கையின் பெருமளவு உற்பத்தித் துறைகள் வீழ்ச்சியடைந்தன. இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு அதிக பங்களிப்புச் செய்த தேயிலை, ரப்பர், தென்னை ஆகியவற்றின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்து சேவைப் பொருளாதாரம் ஊக்குவிக்கப்பட்டது.


குறிப்பாக சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் அக்கறை செலுத்துதல் என அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான உபாயங்கள் வகுக்கப்பட்டன.

இப்படி பல வழிகளிலும் தொய்வையும் தளர்வையும் நோக்கிச் சரிந்துகொண்டிருந்த பொருளாதாரம் இன்று மிக மோசமான நிலைக்குள்ளாகி யிருக்கிறது. ஆனால் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குவோம் என்று ராஜபக்ஸக்கள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். யுத்தத்தில் புலிகளை வெற்றி கொண்டதைப் போல பொருளாதார நெருக்கடியிலும் தம்மால் வெற்றியடைய முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால் நிலைமை அப்படியாக இல்லை.

கடந்த வாரம் இந்தியாவிற்குப் பயணம் செய்த நிதியமைச்சர் பசில் ராஜபக்ஸ இந்தியா விடமிருந்து ஒரு பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றிருக்கிறார். இது உடனடியாகச் சில நெருக்கடிகளைத் தீர்க்க உதவும். ஆனால் நீண்ட கால அடிப்படையில் உதவப்போவதில்லை.

டொலர் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் துறைமுகங்களில் பொருட்களை இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமானால் IMF- சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை செல்ல வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். அப்படிச் செல்ல வேண்டியிருந்தால் அது பல நிபந்தனைகளுக்கு உட்பட்டே ஆக வேண்டும். அந்த நிபந்தனைகள் இலங்கையை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கவே செய்யும்.

**“ இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குவோம் என்று ராஜபக்ஸக்கள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். யுத்தத்தில் புலிகளை வெற்றிகொண்டதைப்போல பொருளாதார நெருக்கடியிலும் தம்மால் வெற்றியடைய முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால் நிலைமை அப்படியாக இல்லை. ”**





ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

### புண்ணியம் எது?



(நேற்றைய தொடர்ச்சி)

இதென்ன அதிசயம் என எண்ணி பக்தர் அங்கேயே நிற்கையில் சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே சென்ற மூன்று பெண்களும் அதிரூப சுந்தரிகளாய் சிரித்த முகத்தோடு வெளியே வந்ததைக் கண்டார்.

அவர் ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்து "பெண் மணிகளே! நீங்களெல்லாம் யார்? இந்தக் குடிலுக்குள் போனபோது கவலையுடன் சென்றீர்களே. இப்போது திரும்பி வந்த போது சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே இது என்ன அற்புதம்?" என்று கேட்டார். அப்போது அம்மூன்று பெண் மணிகளும் "நாங்கள் மூவரும் சகோதரிகள். கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற நதிகளாய் பூவுலகில் இருக்கிறோம். திரிவேணி சங்கமத்தில் நாங்கள் மூவரும் ஒன்றாக இருக்கும் போது மக்கள் தமது பாவங்களைப் போக்கிக் கொள்ள தினமும் அச்சங்கமத்தில் நீராடுகிறார்கள். அவர்களது பாவங்கள் எங்களைப் பற்றிக் கொள்ள நாங்கள் அலங்கோலமாகிக் கவலையுடன் தினமும் இங்கு வந்து இந்த மகானை தரிசித்து எங்களைப் பற்றிய பாவங்களைப் போக்கிக் கொண்டு மகிழ்கிறோம்" என்றார்கள். அது கேட்டு பக்தர் "அப்படி இவரிடம் என்ன மகிமை உள்ளது? என்று கேட்கவே அவர்களும் "அதென்ன இப்படி கேட்டு விட்டீர்கள்? இவர் ஒரு விநாடி கூட வீணாக்காமல் தம் தாய், தந்தையருக்கு மிகுந்த ஈடுபாட்டுடன் பணிவிடை புரியும் மகான். இந்தப் புண்ணியாத்மாவை தரிசித்தாலே பாவங்கள் எல்லாம் போய்விடும்.

இந்த மகான் தம் நடத்தையால் ஒருவன் தன் தாய், தந்தையருக்குப் பணிவிடை செய்வதை விட உயர்ந்த புண்ணியம் வேறெதுவும் இல்லை என்று எல்லோருக்கும் அறிவுறுத்துகிறார். இவரது அறிவுரையை ஏற்று நடந் தாலே போதும். புண்ணியம் கிடைத்து விடும். கோவில் குளம் என்றெல்லாம் தீர்த்த யாத்திரை செய்யவும் போக வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சென்றனர்.

பக்தருக்கு அப்போது புதிய ஞானமே ஏற்பட்டது. அவர் திரிவேணி சங்கமத்தில் நீராடக்கூடப் போகாமல் உடனேயே தன் ஊருக்குத் திரும்பி வந்தார்.

அப்போது முதல் தம் தாய், தந்தையருக்கு இடைவிடாமல் பணிவிடை புரிந்து அதுவே மாபெரும் புண்ணியம் என அவர் கருதி வரலானார்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




"இலக்குவன் தம்பியுடனோ, தமையனுடனோ பிறக்கவில்லை; அவன் தன் வலிமையையே துணையாகக் கொண்டு வாழ்கிறான் என்பதை எடுத்துக் கூறுக" என்றான்.

இராமன் தக்க சொல் சொல்லித் தம்பியைத் தணித்தான்; சுமந்திரனை அயோத்திக்குத் திரும்புமாறு பணித்தான் தானும், தையல் தன் கற்பும், தன் சால்பும், தம்பியும், கருணையும், நல்லுணர்வும், வாய்மையும் தன் வில்லுமே துணையாகக் கொண்டு காடு நோக்கிச் சென்றான்.

### சுமந்திரன் திரும்புதல்

சுமந்திரன் தானும் தேருமாக மட்டும் திரும்பி வந்த செய்தியை அறிந்து வசிட்டரும் தசரதனும் இராமனைப் பற்றி வினவினர். "நம்பி சேயனோ அணியனோ?" என்று தசரதன் கேட்டான். "அதை நான் கவனிக்க முடியவில்லை. மூங்கில் நிறைந்த காட்டில் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும் போயினர்" என்று கூறினான்.

"சென்றவர் இனி மனம் மாறி வரப் போவதில்லை; அதேபோலச் செல்லும் உயிரை நிறுத்துவதனால் விளையப் போவது யாதும் இல்லை" என்ற முடிவுக்கு வந்த மன்னன் விடை பெற்றுக் கொண்டான்; அவன் சடலத்தை மட்டும் அங்கே விட்டுச் சென்றான்.

### கோசலையின் துயர்

"மன்னன் உயிர் பிரிந்தான்" என்ற நிலை கோசலையைத் துடிக்க வைத்தது. முதத்தை இழந்த அமரர்களைப் போலவும், மணியிழந்த நாகம் போலவும், இளம் குஞ்சுகளை இழந்த தாய்ப் பறவை போலவும், நீரற்ற குளத்து மீன் போலவும் பிரிவால் வாடினாள்; நிலைதடுமாறினாள்.

"காக்க வேண்டிய மகன், தந்தையின் உயிர் போக்கக் காரணமாய் இருந்தானே" என்று வருந்தினாள்.

"நண்டும், இப்பியும், வாழையும், மூங்கிலும் சந்ததிக்காகத்தான் அழிகின்றன. தசரதனும் மகனுக்காகத் தன்னை அழித்துக் கொண்டான்" என்று ஆறுதல் அடைந்தாள்.

மேகத்தில் மின்னல் புரளுவதைப் போலத் தசரதன் மார்பில் கிடந்து புரண்டாள்; சுமத்திரையும் துன்பச் சுமையால் அழுது உயிர் தளர்ந்தாள். மகனைப் பிரிந்த பிரிவும், கணவனை இழந்த துயரும் அவர்களை வாட்டின. வசிட்ட முனிவர் ஈமக் கடனைச் செய்து முடிக்கப் பரதனை அழைத்துவர நாள் குறித்து, ஆள் போக்கி ஓலை அனுப்பினார். வழி அனுப்பச் சென்ற நாட்டு மாந்தர், உறக்கத்தினின்று விழித்து எழுந்தனர்; தேர்ச் சுவடு கண்டு "கார்நிறவண்ணன் ஊர் திரும்பி விட்டான்" என்று அவர்களும் அயோத்தி திரும்பினர்.

### கங்கையைக் கடத்தல்

வனம் புகு வாழ்வு, மனத்துக்கு இனிய காட்சிகளைத் தந்தது. கதிரவனின் ஒளியில் அவன் கரிய மேனி ஒளிவிட்டுத் திகழ்ந்தது. சீதையும் உடன் வரக் காட்டு வழியே நடந்தான். வழியில் களி அன்னமும் மட அன்னமும் உடன் ஆடுவதைக் கண்டனர். மேகமும் மின்னலும் போலவும், களிறும் பிடியும் தழுவிச் செல்லுதல் போலவும் இராமன் சீதையோடு நடந்து சென்றான்; அன்னம் தங்கும் பொழில்களையும், சங்குகள் உறையும் எக்கர்களையும், மலர்கள் சிந்தும் பொழில்களையும், பொன்னைக் கொழிக்கும் நதிகளையும் கண்டு மகிழ்ந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாநாயக்கர்களை சந்தித்த விமல் அணி ஆட்சியைக் கவிழ்க்குமா வியாசரே?

**மதுவன் மீசாலை**

**பாசத்தோடு வளர்க்கும் நன்றியுள்ள நாய்க்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

நன்றி என்ற சொல்லின் உயிர்ப்புத் தன்மை இன்றுவரை இருக்கிறது எனின் அது நாய்களால் மட்டுமே.

அந்த இனம் இந்தப் பூமியில் இல்லாதிருந்திருந்தால் நன்றி என்ற வார்த்தை இல்லாமலே இருந்திருக்கும்.

நன்றி மறப்பது நன்றன்று என ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே திருவள்ளுவர் கூறியிருக்கின்றார் எனின் அப்போதே மனிதனிடம் நன்றி மறக்கும் தன்மை இருந்திருக்கின்றது என்ற பொருளுக்கு நாம் வந்து விடலாம்.நாய்களுக்குப் பேசும் திறன் இருந்தால் மனிதனுடன் எம்மை ஒப்பிடாதீர்கள் என்ற எதிர்ப்பையே முதலில் வெளியிடும்.

**தீபாலி மீசாலை**

**இராஜமௌலியின் ரத்தம்,ரணம், ரௌத்திரம் பார்த்துவிட்டீர்களா மாமா. பாகுபலி போல இருக்கிறதா?**

வரலாற்றுக் கதையின் மையப் பொருளைக் கொண்டு வழமையான தனது கற்பனைக் கதைகளை புகுத்தி பிரமாண்டமாய் உருவாக்கியிருக்கிறார் ராஜமௌலி.

நடிகர்களான ராம்சரன், ஜூனியர் டி.ஆர். இருவரும் தமக்குள் போட்டி போட்டு நடித்துள்ளனர்.காட்சி அமைப்புக்கள், சண்டைக் காட்சிகள் என்பன மிகவும் பிரமாண்டமாக இருக்கின் றன.படத்தின் பல இடங்களில் படம் பார்ப்பவர்களை கதிரையின் நுனிக்கு கொண்டு வந்தி ருக்கிறார் ராஜமௌலி.

பாகுபலி அளவுக்கு பிரமாண்டம் குறைவென்றாலும் படம் தொய்வின்றி விறுவிறுப்பாய்ச் செல்கிறது.

**ராஜ் வதிரி**

**தாயின் தியாகம் எப்படிப்பட்டது வியாசரே?**

உலகில் மிகவும் தியாகம் நிறைந்தவள் தாய். அதிலும் அதிக தியாகம் நிறைந்த தாய் எனப் போற்றப்படுவது கடலில் வாழும் ஒக்டோபஸ் ஆகும்.

அது ஒரே நேரத்தில் சுமார் 50 ஆயிரம் முட்டைகளை இடுமாம்.

அந்த முட்டைகள் பொரிக்க சுமார் ஆறு மாதங்கள் செல்லுமாம்.

அதனால் அவை உணவு உண்ணாமல் முட்டைகளைப் பாதுகாக்குமாம்.

குறித்த முட்டைகள் பொரித்ததும் அந்தத் தாய் ஒக்டோபஸ் பட்டினியால் இறந்துவிடுமாம்.

இதனால் அதிக தியாகம் நிறைந்த தாய் என ஒக்டோபஸ் போற்றப்படுகிறது.

இந்த உலகில் தாய்க்கு நிகர் எதுவுமே இல்லை. எதையும் இழந்த பின்னரே அதன் அருமை தெரியும். அந்த உன்னத ஜீவனை இருக்கும் வரை கொண்டாடுவோமே.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**சீதையை மீட்க இராமன் இலங்கை வந்தாரே?**

அன்று இராவணனிடம் இருந்து சீதையை மீட்க இராமன் வந்தான்.

இன்று இலங்கையைக் கடனில் இருந்து மீட்க யார் வருவார்கள்.கடன் கேட்காதவர் உலகில் எவரும் இல்லை என்ற நிலையில் இருக்கிறது நாடு.

அதைவிட நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றனர் ஆட்சியாளர்கள்.

இப்போது இருக்கும் நிலையில் எந்த மீட்பர் வந்தாலும் நாடு வழமைக்குத்திரும்ப மூன்று வருடங்களாவது ஆகும். அதற்குள் நாங்கள் உயிருடன் இருக்க வேண்டுமே.

**சுதன் குப்பிழான்**

**சர்வதேச நாடுகளே இலங்கைக்கு பணம் வழங்க மறுத்துவிட்டன. அங்கு வாழும் புலம்பெயர் தமிழர்கள் கொடுப்பார்களா?**

இப்போது அரசாங்கத்தின் நோக்கம் என்ன தெரியுமா? என்ன செய்தாவது டொலரை நாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அதற்காக இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றுவார்கள்.

முதலில் தமிழினத்திற்கான அரசியல் தீர்வை முன்வைக்கட்டும். அதற்குப் பிறகு இந்த முதலீடு தொடர்பில் யோசிக்கலாம்.

அதை எல்லாம் விட்டுவிட்டு புலம் பெயர் தமிழர்களை முதலீடு செய்ய அழைப்பது எதற்காக என்பதை அவர்கள் நன்கு அறிவர்.




இராஜமௌலியின் ரத்தம், ரணம்,ரௌத்திரம் பார்த்துவிட்டீர்களா மாமா. பாகுபலி போல இருக்கிறதா?

**திருவரதராசா வவுனியா**

**சிறைக்குப்போனால் மூன்று வேளை சாப்பாடும் இலவசமாகக் கிடைக்குமாமே, வெளியிலும் துன்பமான வாழ்க்கை தானே வியாசரே?**

அதுவும் சரிதான். ஆனால் அங்கும் சாப்பாட்டின் நிலை எப்படி இருக்குமோ தெரியவில்லையே.

அரசாங்கம் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிட்டது.போகிற போக்கைப் பார்த்தால் சிறையில் இருப்பவர்களை பராமரிக்க முடியாது என்று விடுதலை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இந்த நிலை தெரியாமல் நாம் வடிவேலு போல நானும் ரவுடி தான் நான் ஜெயிலுக்குப் போறன் என்று பீச்சியடித்து பயன் ஏதும் இல்லை.

**தருஷ் வதிரி**

**வாழ்க்கையில் எல்லோரையும், எல்லாவற்றையும் பிடித்து விடுமா வியாசரே?**

அப்படி இருந்து விட்டால் அந்த வாழ்க்கைக்குப் பெயர் வாழ்க்கை இல்லை.

வாழ்க்கை என்பது எதிர்நீச்சல் நிறைந்ததாய் இருக்க வேண்டும்.

மலையில் ஏறுவதை ஏன் கடுமையானதும் சவால் நிறைந்ததுமாய் கூறுகின்றார்கள் தெரியுமா?

மலை செங்குத்தானதாக இருக்கும். உயர உயர பிராணவாயுவின் அளவு குறையும், கற்கள், முட்கள் நிறைந்த கடினமான பாதையாய் இருக்கும்.

பல இடங்களில் நாமே பாதைகளை உருவாக்க வேண்டி இருக்கும்.

இத்தனை சவால்களையும் கடந்து அந்த மலையின் உச்சியில் நிற்கும் போது கிடைக்கும் பாராட்டுக்கள் உன்னதமானது.

இந்த உன்னதத்தை உணராத வரை வாழ்வை வெற்றி கொள்ள முடியாது.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**மகாநாயக்கர்களை சந்தித்த விமல் அணி ஆட்சியைக் கவிழ்க்குமா வியாசரே?**

ராஜபக்ஷக்களின் விசுவாசிகள் அவர்களின் ஆட்சி மீது அதிருப்தி கொள்ளத் தொடங்கிவிட்டனர்.அதிலும் விமல் வீரவன்ச போன்ற பேச்சு வன்மை, அரசியல்-மக்கள் பலம் கொண்டவர்களை அரசாங்கம் வெளியே விடுவது அவர்களுக்கு நல்லதல்ல.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கை பெற்றிருந்தவர் விமல்வீரவன்ச.

அவரின் கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடக்கூடியது.

பொறுத்திருந்து பார்ப்போம் ராஜபக்ஷக்களுக்கெதிரான விமலின் கருத்துக்கள் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்க பயிற்சி

இரவுகள் அழகானது தான்
அதன் நிசப்தத்திற்குள் எத்தனை ஆயிரம்
குழப்பங்களும் குரோதங்களும் இருக்கிறது என்பது

தனிமையின் நிழலில் ஏதோவொரு மூலையில்
சொந்தங்களை தொலைத்து விடுதிகளின்
விறாந்தையில் பனங்கிழங்காய் அடுக்கப்பட்டிருக்கும்
அந்த அற்ப மாணவனுக்கு தான் தெரியும்.

அருகிருந்து கதை பேசிய நண்பன்
சொல்லமுடியாத காரணத்தால் தூக்கில் தொங்கிய
அந்த ஒற்றை காற்றாடி தான் இன்றும் சுவாசிக்க
சுழன்று கொண்டிருக்கின்றது.

அதன் காற்றை வாங்கும் போதெல்லாம்
நண்பன் கூறிய சிறு குறும்புகளின்
துணுக்குகள் துளியாகி கண்ணோரம் வடிகிறது

அதை பக்கத்தவன் பார்க்காமலிருக்க துடைக்கின்ற
ஒரு கையும் ஒருநாள் அவன் தோள்
உரசியது என்பது தான் இன்னும் வேதனை.

இது எல்லாம் இருட்டின் இரகசிய சங்கோஜங்கள்
என்றாலும் விடிந்ததும் மெல்லிதாய்
புன்னகைக்க பயிற்சி எடுத்துக் கொள்கிறான் அவன்.

எதுவும் பயிற்சியினால் தானே கைகூடும்.
அதில் சிரிப்பென்ன விதிவிலக்கு.

நவாலி,
பிரியன்.

## பெற்றோரே பெறுமதி



பெற்ற அன்னையின் பேரன்பும்
பேணி வளர்த்த தந்தையின்
கற்றொழுக வைத்த நல்
வார்த்தைகளும் பெறுமதியே!

உற்ற தருணங்கள் உறுதுணை கொண்டு
தடைகள் பல வென்று வாழ
பற்றும் பாசமும் பெருக்கும்
சோதரரும் சோதரியும் பெற்றோரே

நல்வழி செல்லவே நண்பன்
அல்லவே அப்பெயர் தாங்கி
பொல்லா வழிகாட்டும் போக்கிரி
அவனுடன் செல்லவோ!

வாழ்க்கை என்பதோ பயணம் அங்கே
வறுமை என்பது துயரம்
அறம் விரும்பி அனைவரும் வாழ
நலமடைவோம் நாமே!

ஆறுமுகம் சிவபாதம்
இணுவில்.

## நிர்மலனே அருள்வாயே!

நல்லை நகர் நாவலரும் நவாலியூர் பாவலரும்
நம் மண்ணில் நாம் கண்ட நல்ல தமிழ் காவலரும்
வல்லவரும் நல்லவரும் வாண்மை மிகு மேதைகளும்
வையகமே போற்றி நின்ற சைவப் பெரு மகரும்
கல்வியிற் கரை கண்டோரும் கலைகளிலே ஆழ்ந்தவரும்
கண்ணியராய் புண்ணியராய் களங்கமின்றி வாழ்ந்தவரும்
சொல்லிய அறநெறிகள் அள்ளியீந்த ஆன்றோரும்
சோதியாய் ஒளியீந்த ஒப்பில்லாச் சான்றோரும்
வாழ்ந்து போன மண்ணிலிப்போ வந்த துயர் கேளீரோ!
வசந்தமான அவ் வாழ்வு கசந்த கதை காணீரோ!
தாழ்ந்து துயர் சூழ்ந்த நம் தமிழன் கதை அறிவீரோ!
தரம் கெட்டோம் தரணியிலே நம் தாழ்வு நிலை பாரீரோ!

கஞ்சாவும் கசிப்பும் கடல் கடந்து வந்த அந்த
காலத்தில் நாம் காணாக் கண்டறியா போதைகளும்
அஞ்சாது அருந்தி நின்று துஞ்சாது துயர் கொடுக்கும்
ஆண்மக்கள் கீழ் மக்கள் ஆகிவிட்ட அவலமிப்போ
கொடுவான் கரமேந்த கொலை வெறியில் மனம் நீந்த
கொட்டங்களடிப் பதிலவர் மட்டமாய் ஆகிவிட
தடுமாறிப் போகிறதே எம் தாய் மண்ணாம் தமிழ் மண்ணாம்
தலைவிதியோ! இது சதியோ! இதுதான் இனிவரும் கதியோ!
யாழ். மண் எங்களுயிர் வாழ் மண் வடிவழிந்து
பாழ் மண் ஆகிறதே பண்பாடு பல ஒழிந்து
நீள் கதையாய் ஆகாமல் நீண்ட தூரம் போகாமல் இது
நிலைமாற நிறைவேற நிர்மலனே நீ அருள்வாயே!

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை கிழக்கு.

## மௌனத்தின் தேடல்- 555



## மனசுமை வண்டி

இன்று மக்கள் துன்ப சுமையை,
மனம் உடலில் சுமந்தபடி வாழ்வு
துன்ப சுமையை மனம் உடலில்
சுமந்தபடி தொழில் சுமை வண்டியை
தள்ளியும் இழுத்தும் செல்லும்
இளைஞர்களின் மனம் உடல்
துன்பத்தை யாரறிவர்?
சுமை சுமக்காதோர் துன்பம் அறியார்.

சி.சுகிர்தமலர்,
உரும்பிராய்.

## கொடிது கொடிது வாழ்வில் வறுமை கொடிது

பள்ளிப் படிப்பின் பருவத்திலே
பயின்றிட வேண்டிய பாலகருமோ
படிப்பின் பெறுமதியை எண்ணிடாது
பண்டங்களின் மூடைகளுடன்
பாரவண்டி இழுத்திடும் முயற்சி
வறுமையின் கொடுமை தானோ

தங்கத் தமிழன்
காரைநகர்

## நித்திரைக்கு போகையிலே...

நித்திரைக்குப் போகையிலே
நிம்மதியை திருடுவார்கள்
சத்தமின்றி உணவுப்பொருள்
சதிகாரர் உயர்த்துவார்கள்
பித்துப் பிடித்ததுவாய் மக்கள்
பீதியிலே வீதி தத்தெடுக்க வைப்பர்
கொத்துக் கொத்தாய் கொரோனா
கொன்றநிலை பறை சாற்றுவரா

தவமணி
நல்லூர்

## ஏழைச் சிறுவன்

பள்ளி மறந்து பாதைகள்
தோறும் அலைந்து
பாதச்சுவடுகள்
தேய்ந்தவன் – நீ
விலைவாசி உயர்வு
வினையாக விளையாட
பலகோடி துன்பம்
பனிபோல உனை மூட
வயிற்றுப்பசி உயிரைக் கொல்ல
களையாமல் தளராத துணிவோடு
மாடு போல் வண்டி இழுத்து
குடும்ப சுமை தாங்குகின்ற
ஏழைச் சிறுவன்
தொழிலாளி – நீ

[illegible],
உடுப்பிட்டி.

## மௌனத்தின் தேடல்- 556



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஹூர் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## எதிர்கால வாழ்வுக்கு...

பாரவண்டியை இழுக்கவும்
தள்ளவும் முடியாத பசி
வயிற்றுப் பாலகரது முயற்சி
பாராட்டுக்குரியதே கல்வி
பயிலும் வயதில் கடும் உழைப்பு
எதிர்கால வாழ்வுக்கு
இதம் தருமா எண்ணிப்பார்

வைகதன்
கொக்குவில்.

## கொடுமை

பள்ளியில் புத்தகம் சுமந்து படிக்க வேண்டிய
இந்தச் சிறுவன் வாழ்வில்
உயிர் வளர்த்திட தன் கைகளால்
இப்படிப் பொருட்கள் நிறைந்த
வண்டியை இழுக்கிறான்.
இது போன்ற கொடுமை இவ்வுலகில்
வேறு உண்டோ?

சுப்பிரமணியன் ஜெயரூபன்
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அவுஸ்திரேலியப் புலனாய்வுத் துறையினர் கேட்கப் போகிற கேள்விகள் ஒவ்வொன்றிலும் ராதா ஒட்டிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு, முதல் நாள் இரவிலிருந்து நீதனை உருட்டி எடுத்தது. ராதா கிட்டத்தட்ட நீதனின் ஒட்டு மொத்த ஆயுத வாழ்க்கையினதும் தரமான சாட்சி.**

## வலி சொல்லும் தொடர்... 26



அனீஸாவின் ஞாபகமும், இரண்டு பிள்ளைகளின் நினைவுகளும் ஆழத்தில் இரைந்து கொண்டிருப்பது நீதனுக்குள் புதிய அலை வரிசையில் கேட்டது. ஒரு தேசத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று போராடிய நீதனுக்கு, போகும் தேசமெல்லாம் புதிய புதிய வாழ்க்கைகளும் விடுதலையை விடச் சிக்கலான புதிர்களும் பரந்து கிடந்தன. ஏற்கவும் மறுக்கவும் முடியாத அவனது மனம், ஒவ்வொரு கணமும் சவால்களுக்குத் தயாராகத் தன்னை ஒப்புவிக்க வேண்டியிருந்தது.

இந்தோனேசியக் கடற்கரையின் புதை மணலில், விடை பெற்று வந்த அனீஸாவின் பிரிவும் அந்தக் கதகதப்பான அணைப்பின் வெப்பமும் இன்னமும் அணையாமல் உள்ளுக்குள் கூடு கட்டியிருப்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொண்டிருந்த நீதனுக்கு, ராதா சிறு கந்தகத்தணலாக நினைவில் திரவமாய் உருண்டு ஓடினாள். நீதனின் வாழ்க்கையை ஐந்தாறு வருடங்களுக்குப் பின்னோக்கி இழுத்துச் சென்றாள்.

துப்பாக்கியின் வாடையையும் மீண்டும் நாசியில் தூவி விட்டது போலிருந்தது. இழப்புகள் எல்லாவற்றையும் விட, மிகப் பெரியதொரு துரோக மேட்டின் மீது நின்று கொண்டிருக்கிறோமோ என்ற உணர்வு, உயிரைப் பிசைந்தது. இரந்து நிற்கின்ற இந்தத் தேசத்துக்கு இந்த உணர்வுகள் எப்படித்தான் புரியப்போகின்றன என்ற கோபம் வேறு, நீதனின் தனிமையைச் சுரண்டிப் பார்த்தது.

ராகவன் மாஸ்டரின் நினைவுகள் மீண்டும் மீண்டும் நெஞ்சில் தாழ் மேகங்களாகத் தெரிந்தன. ஆயுதங்களோடு புழங்கியதாலோ என்னவோ, அவனின் அருகாமையை நாடும் பெண்களும் கூட ஆயுத வாசனையோடு தான் வந்து சேர்கிறார்கள் என்பதையும் புன்னகையோடு அசை போட்டுக் கொண்டான்.

தன்னை ஒரு நிலைப்படுத்துவதற்கு அவன் போராடிக் கொண்டிருந்த அந்தக் காலையில், தகரக் கொட்டகைக்கு முன்னாலிருந்த உயரமான மேப்பிள் மரத்திலிருந்து மக்-பைபறவை யொன்று அவனையே உற்றுப்பார்த்தது.

ராதாவின் அறைக்கு வெளியில், முகாமின் வெளிக்கொடியில் அந்த மென்மஞ்சள் நிறத்தில் கழுத்தைச் சுற்றி கறுப்பு வளையம் வைத்துத் தைத்த சட்டை துவைத்துக் காயப் போட்டிருந்தது. அதற்கு அருகில் காய்ந்து கொண்டிருந்த சின்னஞ் சிறிய பூப்போட்ட சட்டை இன்னும் அழகாக இருந்தது. அந்தப் பெரிய சட்டை இவ்வளவு காலமாகச் சொரிந்து கொண்டிருந்த எல்லா தொந்தரவுகளையும் இப்போது அந்தச் சிறிய சட்டை முழுதாக விழுங்கியிருந்தது. அந்தச் சட்டைக்கும் கூட முயல் காதுகள் முளைத்து விட்டதைப் போலத் தெரிந்தது. அந்தச் சிறிய சட்டை இன்னும் இன்னும் அழகாகத் தெரிந்தது.

நீதன் அன்றிரவு கண்கள் நிறைய சொல்லி முடித்த இந்தக் கதைக்குப் பிறகு, அவன் என்னிடம் கேட்ட கேள்வி தான் தூக்கி வாரிப்போட்டது.

"அண்ணே, அவுஸ்திரேலியப் புலனாய்வுத் துறையிட்ட என்னைப் பற்றி ராதா ஏதாவது சொல்லியிருப்பாளா?"

அகதிகள் வாழ்வு சூதாட்டம் போன்றது. எவ்வளவு தான் அப்பாவிகளாக அவர்கள் தேசம் விட்டு வந்தாலும், கரை சேருகின்ற தேசம் அவர்களை ஒரு வகை செய்துவிடுகிறது.

தஞ்சம் கோரி வரும் அவர்களை அரசுகள் ஆயுளுக்கும் பகடைக் காய்களாக [illegible] ஆரம்பிக்கிற[illegible] பதிலுக்கு தங்களைத் தயார் செய்து கொள்கிறார்கள். இந்த வரிசையில் ராதாவும் சேர்ந்திருப்பாளோ என்ற அச்சம் நீதனை ஒரே இரவில் ஆழமாகத் தொற்றிக் கொண்டது.

அவுஸ்திரேலியப் புலனாய்வுத் துறையினர் கேட்கப் போகிற கேள்விகள் ஒவ்வொன்றிலும் ராதா ஒட்டிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு, முதல் நாள் இரவிலிருந்து நீதனை உருட்டி எடுத்தது. ராதா கிட்டத் தட்ட நீதனின் ஒட்டு மொத்த ஆயுத வாழ்க்கையினதும் தரமான சாட்சி. அவள் மாத்திரம் தனக்கு எதிராக வாய்திறந்திருந்தால், தனது ஆயுள் அவுஸ்திரேலியாவில் பல குழிகளில் வெட்டிப் புதைக்கப்படும் என்பது நீதனுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

தமிழ் அகதிகள், அவ்வப்போது தங்களது கதைகளை ஓய்வாக இருக்கும் போது, என்னிடம் வந்து தாங்களாகவே பகிர்ந்து கொள்வதுண்டு. தங்கள் மீது எனக்கொரு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்கு அப்பால், குடிவரவு அமைச்சு அதிகாரிகளிடம் தங்களது அனுபவத்தைச் சொல்வதற்கான ஒத்திகையாகக் கூட என்னிடம் ஒப்புவிப்பதுண்டு.

நான் எந்த பதிலோ கருத்தோ சொல்லாமல், அவர்களது கதைகளைக் கேட்பதுண்டு. அந்தக் கதைகளில் எவ்வளவு விகிதாசா[illegible]மை, பொய் கலந்[illegible] என்பதை, காலப் போக்கில் என்னாலேயே கண்டுபிடித்து விடக் கூடியதாயிருந்தது.

ஆனால், நீதனின் கதை எனது மனதின் ஆழ் குழிகளில் போய் விழுந்தது. ஏனோ தெரியவில்லை. அவனது கதையிலிருந்த ஆன்மா, உண்மையை மாத்திரமே பேசுவதாக உணர்ந்தேன். உண்மையும் அதுவாகவே இருந்தது.

"விடுதலையை உண்மையிலேயே தேடிய ஆன்மாக்கள், ஒரு போதும் துரோகத்தை எண்ணாது நீதன். ராதா உனக்கு முன்னரே சாவை விரும்பிப் போனவள். அவளது வைராக்கியம் ஒரு கட்டத்தில் உன்னை விடவும் உறுதியாயிருந்தது என்பது உனக்கே தெரியும்.

அப்படிப்பட்ட மனதிலிருந்து அகால எண்ணங்கள் ஒரு போதும் தோன்ற வாய்ப்பில்லை. மனசைப் போட்டுக் குழப்பாமல் போய்ப்படு." அன்றிரவு ஆறுதல் சொல்லி அனுப்பினேன்.

அடுத்த நாள், நீதனுக்கான சந்திப்பு சுமார் ஏழுமணி நேரமாக நடைபெற்றது. நீதனை முகாமின் பிரத்யேக சந்திப்பு அறைக்கு அழைத்துச் சென்ற அவுஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவினர், மொழி பெயர்ப்பாளர் சகிதம் வாரியெடுத்தார்கள்.

நீதனின் இந்தச் சந்திப்பு நடைபெற்று நான்கு நாட்களுக்குப் பிறகு தான், எனக்கு வேலையிருந்தது. அவனைக் கடைசியாகச் சந்தித்த இரவு போல் அல்லாமல், அவனில் தளும்பிக் கொண்டிருந்த தடுமாற்றங்கள் நிறையவே வழிந்தோடியிருந்தன.

'ஒரு பிரச்சினையும் இல்லைத் தானே...' என்பது போல கட்டை விரலை உயர்த்திக் கேட்டேன். என்னுடன் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் ஓடிவந்தான்.

அண்ண, சந்திப்பு நடந்து முடிஞ்சுது."

"எல்லாம் ஓகேதானே"

நடந்து கொண்டே பேசினான்.

"ம்.." எதையோ சொல்லத்தடுமாறினான்."ராதாவைப் பற்றியும் கேட்டவங்கள்." ஒரு விதக் குழப்பத்தோடும் அச்சத்தோடும் குரலைத் தாழ்த்திச் சொன்னான்.


"ராதா..?" "அவள் எதுவும் என்னைப் பற்றிச் சொன்ன மாதிரித் தெரியேல்ல அண்ணே. ஆனால், எங்கள் இரண்டு பேரைப் பற்றியும் வேறயாரோ மாட்டி விட்டிருக்கிறாங்கள்." என்னை அறியாமலேயே எனது நெற்றி சுருங்கியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## மஞ்சளழகி




காட்டுப் புஷ்பம் போலவே அவள் அவயவங்கள் செழித்துக் கிடந்தன. திண்மையான கழுத்தும், சிற்றிடைக்குக் கீழே முன்னும் பின்னுமிருந்த வளர்ச்சியும் இன்ப இச்சை நிறைந்த உள்ளத்துக்கு வெளிச்சான்றுகளாகக் காட்சியளித்தன. உறுதியாக நிலத்தில் ஊன்றிய அவள் கால்கள் மிகுந்த. அழகு படைத்து, கட்டை விரலிலிருந்து மேல் நோக்கு நோக்கினால், சிறிதாகத் துவங்கிப் பெரிதாகக் கடலுக்கு அருகே விரியும் அழகுள்ள நதியையும் தோற்கடிக்கும் வண்ணம் அமைந்திருந்தன.

இத்தனை அழகுகளைத் தாங்கி, நல்லவளா, பொல்லாதவளா, சீனத்துப் பெண்ணா, வேறு நாட்டவளா என்று எதையும் ஊகிக்க முடியாத பெரும் புதிராகவும் அசைவற்றும் நின்ற அந்த அழகுச்சிலை அசைய முற்பட்டுத் தன்னை நோக்கி தடக்கத் துவங்கியதும், அவள் தேகத்தின் எழிலிடங்கள் மெல்ல ஆடியும் துள்ளியும் புரண்டும் கூட வந்து இளையபல்லவன் சித்தத்தை எங்கோ இழுத்துக் கொண்டு சென்றன.

தலையில் இருந்த அவள் சுருண்ட மயிரில் பல இழைகள் பிரிந்து தொங்கித் தோளில் புரண்டதும், முழுப் பின்னல் மார்பில் தவழ்ந்ததும் சில இழைகள் கன்னத்தைத் தொட்டதும் பெரும் இம்சையை இளையபல்லவன் இதயத்தில் விளைவித்தன. அந்த உணர்ச்சிகள் அவன் சித்தத்தை ஒரு வருடத்துக்கு முன்பாகப் பாலூர்ப் பெருந்துறைக்கு இழுத்துச் சென்றன. வெளிநாட்டுப் பிரமுகர் வீதியின் மாளிகை அறையில் குதிக்க வைத்தது.

அங்கு தான் திரை மறைவிலிருந்த காட்சியும், ஆடை புனைய வந்த காஞ்சனாதேவியின் தெய்வீக அழகும், அவன் இதயக் கண் முன்னால் தாண்டவமாடின. அன்று தான் ஒளிந்திருந்த திரை அசைந்ததும் அவள் அஞ்சன விழிகள் திடீரென எழுந்து தானிருந்த இடத்தை நோக்கிய. வீர நோக்கையும் கண்டான் அவன். இன்று எதிரேயிருந்த கண்களிலிருந்து பயமற்ற, ஆனால் வீரம் என்று சொல்ல முடியாத பேரழகுக் கண்களையும் பார்த்தான்.

அங்கு அசைந்தது திரை. சீறின அஞ்சன விழிகள். இங்கு அசைந்தது ஒரு சிலை, மயக்கின அழகுக் கண்கள், என்று தனக்குள் எண்ணமிட்ட இளையபல்லவன் இரண்டு அழகிகளுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வையும் எடை போட முற்பட்டுத் தோல்வியே அடைந்தான். இரண்டும் வெவ்வேறு அழகாயிருந்ததையும், ஒன்றுக்கொன்று சளைக்காததாயிருந்ததையும் அறிந்து கொண்ட இளையபல்லவன் ஒன்று மட்டும் தீர்மானமாகப் புரிந்தகொண்டான். "காஞ்சனாதேவியின் அழகு தூய்மையான ஒற்றை நாட்டு அழகு. அக்ஷயக்கோட்டைச் சித்தினியின் அழகில் எத்தனையோ உயர்விருந்தும் அதில் இரண்டு நாடுகளோ இனங்களோ கலந்திருக்க வேண்டும்" என்று உறுதி செய்து கொண்ட இளையபல்லவன், "எந்த இனம் கலந்தாலும் விவகாரங்களைக் கலக்காமல் அந்த இன்ங்களின் அழகுகளை மட்டும் இணைத்து எதற்காக ஆண்டவன் இந்த அற்புதத்தைச் சிருஷ்டித்தான்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அதில் ஒரு முடிவுக்கும் வந்தான். "இது அழகுதான். ஆனால் அஞ்சத்தக்க அழகு.' என்று முடிவுசெய்த இளையபல்லவன் எதிரேயிருந்த கோட்டைத் தலைவன்மீது தன் கண்களைத் திருப்பினான். ஆனால் கோட்டைத் தலைவன் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.

இளையபல்லவன் சிந்தனையைப் பலவிதங்களில் புரட்டிக் கொண்டே அசைந்து அசைந்து நடந்து வந்த அந்தப் பேரழகி அவன் ஆராய்ச்சி முடிவதற்குள் கோட்டைத் தலைவனுக்கும் இளைய பல்லவனுக்கும் இடையே வந்துவிட்டதல்லாமல், கோட்டைத் தலைவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு இளைய பல்லவனை நோக்கித் திரும்பியும் நின்றதால், சோழர் படைத் தலைவன் தன் கண்களைத் தூக்கிய போது எதிரே அவள் எழில் அவனை நோக்கிற்று.

சிருங்கார ரசமடங்கிய பெரும் கவியின் ஏட்டுப் பிரதிகளைச் சுவையுடன் பார்க்கும் ரசிகனின் பார்வையுடன் அவளை நோக்கிய இளைய பல்லவன், தன் சித்தத்தை அடியோடு சீரழிக்கும் நோக்கத்துடன் இயற்கை வளர்த்துவிட்ட பெரும் புஷ்பங்களைத் தாங்கிய ஒரு பூவுடற் செல்வி தன் விழிகளுக்கெதிரெ நிற்பதைக் கண்டான். சிறிது சலனமும் அடைந்தான். சலனம் என்ன? சங்கடமும் அடைந்தான்.

அவளை அப்படி நோக்குவதும், சலனத்துக்கு உட்படுவதும் காஞ்சனாதேவியிடம் தான் கொண்டுள்ள காதலுக்குப் பெரும் இழுக்கு என்று நினைத்துச் சிந்தனையை வேறு திக்கில் இழுக்க முயன்ற இளைய பல்லவன் எப்படிச் சிந்தனை தன் வசமில்லை என்பதை அந்தச் சில விநாடிகளில் புரிந்துகொண்டான். புத்தியின் புறத்தோற்றமான கண்ணெனும் வாயில் வழியாக அவள் எழில் தன் சித்தத்துக்குள் நுழைந்து வேறு நினைப்புக்கே அங்கு இடமில்லாமல் செய்து விட்டதைப் புரிந்துகொண்ட இளையபல்லவன் செய்வதறியாமல் திணறினான். இந்தச் சமயத்தில் கோட்டைத் தலைவனாவது உதவிக்கு வந்திருக்கலாம்.

ஆனால் என்ன காரணத்தாலோ கோட்டைத் தலைவன் ஆக்ரோஷக் கூச்சல் திடீரென அடங்கியது. "உனக்கு உதவ மறுத்தால்?" என்று அவன் ஆரம்பத்தில் இட்ட கூச்சலுக்குப் பின் அவன் எதுவுமே பேசவில்லை. இளையபல்லவன் கண்கள் சென்ற திக்கையும், அவன் பிரமையையும் கவனித்த கோட்டைத் தலைவன் முகத்திலிருந்த ஆக்ரோஷம் திடீரென மறைந்து வதனத்தை மந்தகாசம் ஆட்கொண்டது.

அந்த மந்தகாசத்தின் ஊடே வஞ்சகப் பார்வையொன்றும் புகுந்தது. அவன் முகத்தில் திடீரென ஏதேதோ எண்ணங்கள் புகுந்து மறைந்து கொண்டதற்கான அறிகுறிகள் ஒரு விநாடி தெரிந்தன. பிறகு அவன் ஏதோ முடிவுக்கு வந்து விட்டதையும் அந்த முடிவில் அவனுக்குப் பெரும் திருப்தியும் இருந்ததும் மந்தகாசத்தில் விரிந்து கிடந்தது.

இளையபல்லவனின் அழகு ஆராய்ச்சியைக் கோட்டைத் தலைவன் மிகுந்த நிதானத்துடன் பார்த்துக் கொண்டே நின்றான். அந்தப் பெண்ணின் அழகுக்கடலில் இளையபல்லவன் அமிழ்ந்து போவதைக் கண்டு அக மகிழ்ந்து போனதற்கு அறிகுறியாக அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவனின் அதரங்கள் மெல்லப் புன்முறுவல் கோட்டின.

அந்த ஆனந்தப் புன்முறுவல், அவன் இளையபல்லவனை வலியப் பிணைக்கவல்ல பல திட்டங்களை வகுத்து விட்டதற்கான சாந்தியையும் அவன் மனத்தில் நிரப்பியது. ஆகவே அந்த அழகி தங்களிருவருக்கும் இடையே வந்து தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றதைப்பற்றி அவன் சிறிதும் இலட்சியம் செய்யாமல் இரண்டடி பின் சென்று பழையபடி தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு, அவர்களிருவர் பேச்சின் போக்கைக் கவனிக்க முற்பட்டான்.

இளைய பல்லவனுக்கு முன் வந்து திடமாகவும், ஆனால் பெரும் ஒய்யாரத்துடனும் இடையில் ஒரு கையை முட்டுக் கொடுத்து நின்ற அந்த அழகுச் சிலை தன் செவ்விய அதரங்களைப் பிரித்து, "நீங்கள். மகா வீரர் என்பதைப் புரிந்து கொண்டேன்." என்ற சொற்களை உதிர்த்ததன்றி, தன் தலையையும் ஒருபுறம் வணக்கத்துக்கு அறிகுறியாக ஒருக்களித்தாள்.

அதரத்தின் அபரிமிதச் சிவப்பு, தான் சற்று முன்பு கோட்டைத் தலைவனுக்குப் பரிசளித்த முத்துகளை விடச் சிறந்த நான்கு பற்கள், வீணையின் நாதம் போல் உதிர்ந்த சொற்கள் எல்லாம் இளைய பல்லவன் இதயத்தைக்கொள்ளை கொண்டன. அந்த அழகுச் சிலைக்கு என்னபதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தான் அவன். பிறகு மெள்ள ஒற்றைச் சொல்லை வெளியிட்டான், "நன்றி" என்று.

அவள் மெல்ல நகைத்துவிட்டுப் பதில் சொன்னாள் "உங்களுக்கு அடக்கமும் இருக்கிறது." என்று. "நன்றி." இரண்டாம் முறையும் இளையபல்லவன் அதே பல்லவி யைப் பாடினான். அவளது பெரும் புருவங்கள் நெற்றியை நோக்கி வியப்புக்கு அறிகுறியாக எழுந்தன. "வெட்கமும் இருக்கிறது உங்களுக்கு." என்றாள் அவள் மறுபடியும் நகைத்து.

அவள் நகைப்பு பெரும் இன்பமாகத்தானிருந்தது, இளையபல்லவனுக்கு. இருந்தாலும், திரும்பத் திரும்ப அவள் தன் குணாதிசயங்களை விவரித்ததால் பொறுக்காத அவன் தன் கைவரிசையையும் காட்டத் தொடங்கி, "சில சமயங்களில் அந்தக் குணம் ஆண்களுக்கும் தேவையாயிருக்கிறது." என்றான் மெதுவாக.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திரைவிமர்சனம்




1900 ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டு வரும் போது, பழங்குடியின மக்களில் ஒரு சிறுமியை ஆங்கிலேயர்கள் அரண்மனைக்கு அழைத்து வருகின்றனர். அந்த சிறுமியை மீட்பதற்காக பழங்குடியின மக்களில் ஒருவரான ஜூனியர் என். டிஆர் திட்டம் போடுகிறார்.

அதே சமயம் ஆங்கிலேயர்கள் படையில் பொலிஸ் அதிகாரியாக இருக்கும் ராம் சரண், தனக்கான அங்கீகாரம் கிடைக்காமல் இருக்கிறார். இந்நிலையில், ஜூனியர் என்.டிஆர் சிறுமியை மீட்க வந்திருப்பதை அறிந்துக் கொண்ட ஆங்கிலேயர்கள், அவரை பிடித்து கொடுப்பவர்களுக்கு சிறப்பு அதிகாரி பதவி கிடைக்கும் என்று அறிவிக்கிறார்கள்.

இதனால், ஜூனியர் என்.டி.ஆர் ஐ கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குகிறார் ராம்சரண். இதற்கிடையில் ஒருவரை ஒருவர் தெரிந்துக் கொள்ளாமல் ராம் சரணும் ஜூனியர் என்.டி.ஆர் உம் நட்பாகிறார்கள். இறுதியில் ஜூனியர் என்.டி.ஆர் ஆங்கிலேயர்களை எதிர்த்து சிறுமியை மீட்டாரா? ஜூனியர் என்.டி.ஆர் ஐ. ராம் சரண் தடுத்தாரா? இவர்களின் நட்பு என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் ராம் சரணும் ஜூனியர் என்.டி.ஆர் உம் போட்டி போட்டு நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பழங்குடியினர் கதாபாத்திரத்திற்கு ஜூனியர் என்.டி.ஆர் கச்சிதமாக பொருந்தியிருக்கிறார். தண்டனை பெறும் காட்சியில் மனதை உழுக்க வைக்கிறார். அதுபோல் மிடுக்கான பொலிஸ் அதிகாரியாக நடித்து அசத்தி இருக்கிறார் ராம் சரண். காதல், தந்தைக்கு கொடுத்த சத்தியம், இலட்சியம் என்று நடிப்பில் பளிச்சிடுகிறார்.


பிற்பாதியில் வரும் அஜய் தேவ்கன் போராளியாக மனதில் நிற்கிறார். ஸ்ரேயாவிற்கு பெரியதாக வேலை இல்லை. ஆலியா பட், ராம் சரண் காதலியாக வந்து கவர்ந்து இருக்கிறார். கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார் சமுத்திரக் கனி.

பாகுபலி படத்தின் பிரம்மாண்டத்திற்கு பிறகு இப்படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் ராஜமௌலி. அதே அளவு பிரம்மாண்ட ஆக்ஷன் காட்சிகள் கொடுத்து படத்தை இயக்கி இருக்கிறார். கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார்.

சிறிய கதையை வைத்து அதில் சுதந்திர போராட்ட திரைக்கதை அமைத்து கொடுத்திருக்கிறார். பல காட்சிகளை பிரமாண்டமாக கொடுத்து ரசிக்க வைத்திருக்கிறார். லாஜிக் மீறல்கள் இருந்தாலும் பெரியதாக தெரியவில்லை. படத்தின் நீளத்தை குறைத்திருக்கலாம்.

கீரவாணி இசையில் பாடல்கள் அனைத்தும் தாளம் போட வைத்திருக்கிறது. செந்தில்குமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். பல காட்சிகள் பிரமாண்டமாக தெரிய உதவியிருக்கிறார். குறிப்பாக பாடல் காட்சிகளில் இடம் பெறும் நடனங்கள் ரசிக்க வைக்கிறது. இறுதியாக வரும் பாடலில் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து இருப்பது சிறப்பு.

## மீண்டும் தெலுங்கு திரையுலகில் அனிருத்



தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளராக இருக்கும் அனிருத் தெலுங்கு திரையுலகில் புதிய படமொன்றில் ஒப்பந்தமாகவுள்ளதாக கூறப்படுகிறது.

தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வரும் விஜய் தேவர்கொண்டா, தற்போது பூரி ஜெகன்நாத் இயக்கத்தில் "லைகர்" என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் இப்படத்திற்கு ரசிகர்கள் பெரும் எதிர்ப்பார்ப்போடு காத்திருக்கின்றனர். இதனை தொடர்ந்து விஜய் தேவர்கொண்டா அடுத்ததாக இயக்குனர் சிவ நிர்வாணா இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இவருக்கு ஜோடியாக சமந்தா நடிக்கவுள்ளார்.

இந்நிலையில் இப்படத்திற்கு இசையமைப்பாளராக அனிருத் இணையவுள்ளதாக கூறப்படுகிறது. இதற்குமுன் "கேங் லீடர்", "ஜெர்சி" படங்களின் மூலம் தெலுங்கு திரையுலகில் இவர் கால்பதித்திருக்கிறார். தற்போது அனிருத் இப்படத்தில் இணையவுள்ளதாக வரும் தகவலை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

## ஐந்து மொழிகளில் டிரெண்டாகும் பீஸ்ட்




நெல்சன் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே நடிப்பில் உருவாகி இருக்கும் பீஸ்ட் திரைப்படம் ஐந்து மொழிகளில் டிரெண்டாகி வருகிறது.

விஜய் நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் பீஸ்ட். இதில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். நெல்சன் திலீப்குமார் இயக்கியுள்ள இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. சமீபத்தில் இப்படத்தில் இடம் பெறும் ஜாலியோ ஜிம்கான்னா என்ற பாடலை படக்குழுவினர் வெளியிட்டனர்.

இது ரசிகர்களை அதிகளவில் கவர்ந்தது. இந்நிலையில், பீஸ்ட் படம் ஐந்து மொழிகளில் வெளியாக இருப்பதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர். இதையடுத்து விஜய் ரசிகர்கள் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் மொழிகளில் சமூக வலைத்தளத்தில் போஸ்டரை டிரெண்டாக்கி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : காற்றினிலே வரும் கீதம்
இயற்றியவர் : பஞ்சு அருணாசலம்
இசை : இளையராஜா
பாடியவர் : ஜெயச்சந்திரன், குழு



தைய்யார தைய்யா…தைய்யார தைய்யா…
தைய்யார தைய்யா…தைய்யார தைய்யா…
தைய்யார தைய்யா…தைய்யார தைய்யா…
தைய்யார ஸ்தைய்யா…தைய்யார தைய்யா…

சித்திர செவ்வானம் சிரிக்க கண்டேன்
தைய்யார தைய்யா
என் முத்தான முத்தம்மா
என் கண்ணான கண்ணம்மா
தைய்யார தைய்யா (2)

ஏ குறியா ஏலாவாளி தந்தல வாளம்
ஸ்தைய்யார தைய்யா தைய்யார தைய்யா
சித்திர செவ்வானம்….

தைய்யார தைய்யா தைய்யார தைய்யா
தைய்யார தைய்யா தைய்யார தைய்யா

மைய்யை இட்ட கண்ணாலே மையல் கண்ட நேரம்
மொத மொதலா தொட்டேனே வாய்க்கா கரையோரம்
சாயாமல் சாய்ந்தாளே மார்பிலே

அள்ளி கட்டும் கண்டாங்கி அரை கொறையா ஒதுங்க
அலுங்காம அணைத்தாளே வெதுவெதுப்ப மயங்க
மஞ்சள் கொண்ட கைக்காரி மயக்கி விட்டள் என்னை
ஏ குறியா ஏலாவாளி தந்தல வாளம்
தைய்யார தைய்யா தைய்யார தைய்யா
சித்திர செவ்வானம்…

போய் வரவா என்றாலே ஏக்கதுடன் பார்ப்பா
நான் திரும்பி வரும் வரைக்கும் கரையினிலே நிற்பா
உணவில்லை உறவில்லை வாடுவாள்

என் முகத்தை பார்த்துமே துள்ளி துள்ளி வருவா
முத்தான முத்தங்கள் அள்ளி அள்ளி தருவா
சொக்கி சொக்கி சிரிப்பாளே சொக்கத் தங்கம் போலே
ஏ குறியா ஏலாவாளி தந்தல வாளம்
தைய்யார தைய்யா.தைய்யார தைய்யா
சித்திர செவ்வானம்….

ஆஹா ஆஹா தைய்யார தைய்யா
ஆஹா ஆஹா ஆஹா தைய்யார தைய்யா
ஆஹா ஆஹா ஆஹா தைய்யார தைய்யா

ஏ குறியா ஏலாவாளி தந்தல வாளம்
தைய்யார தைய்யா தைய்யார தைய்யா

சித்திர செவ்வானம் சிரிக்க கண்டேன்
என் முத்தான முத்தம்மா
என் கண்ணான கண்ணம்மா
ஆஹா ஆஹா தைய்யார தைய்யா
ஆஹா ஆஹா ஆஹா தைய்யார தைய்யா
ஆஹா ஆஹா ஆஹா தைய்யார தைய்யா

# அரசிற்கு எதிராக ஆர்ப்பரிக்கும் விமல்

**" ராஜ பக்ஷக்களின் ஆட்சி மலர குத்தி முறிந்த விமல் வீரவன்சவே ராஜ பக்ஷக்களை வீட்டிற்கு அனுப்புவோம் என சபதமிடுகிறார் எனின் இறைவனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றே… "**

இலங்கையின் பொருளாதார நிலை எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்று யாரைக் கேட்டாலும் அதற்குத் தெரியாது என்ற விடையே பதிலாகக் கிடைக்கும். அந்தளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குள் சென்று விட்டதை உணர முடிகின்றது.

இனி யாரிடம் கடன் வாங்கலாம் என்ற பட்டியலில் இடம் இல்லாத அளவிலேயே நிலைமை இருக்கிறது.

அந்தளவிற்கு கடன்பட்டு கலங்கி நிற்கின்றார்கள் ஆட்சியாளர்கள்.

அதிலும் யாரை தமது உற்ற தோழன் என ஆட்சியாளர்கள் நம்பினரோ அந்த உற்ற தோழனான சீனா ஆட்சியாளர்களைக் கைவிட்டு விட்டது என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

பொருளாதாரச் சிக்கல் ஒரு புறம் இருக்க, ஆளும் பங்காளிக்கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையேயான பிளவு மிகவும் உச்சம் பெற்று, ஆளாளுக்குள் மாறி மாறி கோபக்கணை தொடுக்க ஆரம்பித்து விட்டனர்.

அதிலும் ராஜபக்ஷ ஆட்சி மலர அதிகம் குதித்த முறிந்த விமல் வீரவன்ச எதிர்க்கட்சியை விட அதிகம் ஆளும் கட்சியை விமர்ச்சிக்கத் தலைப்பட்டு விட்டார் எனின் விதி வலிது என்பதை மிகத் தெளிவாய் எடுத்தியம்பியிருக்கிறது.

ராஜபக்ஷ ஆட்சி மலர உயிரையும் கொடுக்கும் அளவில் தனது உழைப்பை முழுமையாய் வெளிப்படுத்தி ஆட்சி மலர மிக முக்கியமான நபராகத் திகழ்ந்தவர் விமல் வீரவன்ச.

அதற்காய் அவர் பேசிய பேச்சுக்கள் இருக்கிறதே, அவற்றை சகிப்புத் தன்மை அற்ற எவராலும் கேட்டுவிட முடியாது.

அந்தளவுக்கு ராஜபக்ஷக்களின் விசுவாசியாக இருந்தவரை ராஜபக்ஷ அரசு கணப்பொழுதில் தூக்கி எறிந்திருக்கின்றது எனின் யாருக்கும் எதுவும் நடக்கும் என்பதை மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றது.



அரசை விமர்ச்சித்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக தூக்கி எறியப்பட்ட விமல் வீரவன்ச ராஜபக்ஷ அரசை வீட்டிற்கு அனுப்பாமல் ஓயமாட்டேன் என சபதம் எடுத்திருப்பது, சபாஸ் சரியான போட்டி என்ற அளவில் இருக்கின்றது.

அரசுடனான எதிர்ப்பைச் சம்பாதித்த மேலும் பல பங்காளிக் கட்சிகளை ஒன்றிணைத்து விமல் வீரவன்ச தனி அணியாகச் செயற்படுவது தெட்டத் தெளிவாகியுள்ளது.

இதை கடந்த வியாழக்கிழமை விமல் வீரவன்ச அணி மகாநாயக்கரைச் சந்தித்தமை தெளிவாக எடுத்தியம்பியிருக்கின்றது.

ஆம், முன்னாள் ஆளும் கட்சி அமைச்சர்களான விமல் வீரவன்ச, கம்மன்பில ஆகியோர் அரசின் பெரும்பான்மையை இல்லாதொழிப்போம் என மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து சபதமிட்டிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியில் அதிருப்தி கொண்டுள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, கொவிந்து குமாரசிங்க, டிலான் அலஸ், பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச உள்ளிட்ட 11 கட்சித் தலைவர்கள் தலதாமாளிகைக்குச் சென்று வழிபாடாற்றியதற்குப் பின் மகாநாயக்கரைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு சூளுரைத்தனர்.

பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்கள் அரசியல் மாற்றத்திற்கு தயாராகியுள்ளதை இச்சந்திப்பு எடுத்தியம்பியுள்ளது.

இச்சந்திப்பிற்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச, கேவலமான அமெரிக்கரை நிதி அமைச்சராக வைத்திருந்தால் நாடு முன்னேறாது. ராஜபக்ஷ அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவோம் என தலதாமாளி கையில் நின்று கூறிய போது அடடா இதுவல்லவா கடவுளின் திருவிளையாடல் என்று தமிழ் மக்கள் தங் களை ஆசுவாதப்படுத்திக் கொண்டனர்.

கடந்த நல்லாட்சி அரசு மலர முன்னர் மகிந்த ராஜபக்ஷவுடன் கூடவே இருந்த அவரின் விசுவாசியான மைத்திரிபால சிறிசேன மகிந்தவுடன் இருந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு "நான் தான் உங்களை எதிர்த்து நிற்கும் அந்த அற்புத மனிதன்" என்று கூறினார். அது அன்று மகிந்தவின் வீழ்ச்சியை பறைசாற்றி நின்றது.

இதோ இன்று விமல் வீரவன்ச அணி அரசுடனேயே கூட இருந்தது. ஆனால் அவர்கள் துரத்தியடிக்கப்பட தலதாமாளிகை வளாகத்தில் நின்று ராஜபக்ஷ அரசை விரைவில் வீழ்த்துவோம் என்று சூளுரைத்திருக்கின்றது. இதையே அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்று சிலப்பதிகாரம் உணர்த்தி நிற்கின்றது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சு பிச்சு (பெரு)



உலக அதிசயங்கள் பட்டியலில் இதற்கு முன் இடம் பெறாத 'மச்சு பிச்சு' நகரம் 15 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டிருந்தாலும் 19 ஆம் நூற்றாண்டு வரை உலகத்தின் கண்களுக்கு புலப்படவே இல்லை.

'இன்காக்களின் தொலைந்த நகரம்' என்று பிற்காலத்தில் வரலாற்று ஆய்வாளர்களால் அழைக்கப்படும் மச்சு பிச்சு நகரம், தென் அமெரிக்க நாடான 'பெரு' நாட்டில் கடல் மட்டத்திலிருந்து 2800 மீற்றர் உயரத்தில் மூன்று புறங்களிலும் மலைகளால் சூழப்பட்ட உருபம்பா நதியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் காடுகள் அடர்ந்த மலைப்பகுதியில் கற்களால் உருவாக்கப்பட்ட நகரம்.

இன்காக்கள் என்பவர்கள் 12 ஆம் நூற்றாண்டில் பெரு தேசத்தில் ஆந்திய மலைப்பகுதிகளில் சிறு சிறு குழுக்களாக வாழ்ந்து வந்த மலையின மக்கள். இயல்பாகவே கட்டடக்கலையில் நுட்பமான அறிவும் நிர்வாகத்திறனும் மிக்க இன்காக்கள், 15 ஆம் நூற்றாண்டு வரை தங்களுக்கென்று ஒரு அரசை உருவாக்க முயற்சிக்கவில்லை.

எங்கு சென்றாலும் ஒற்றுமை உணர்வோடு வாழும் தன்மை பெற்ற அவர்களின் மொழி 'கொச்சாவா' என அறியப்படுகிறது. எழுத்து வடிவம் இல்லாத மொழியாக இருந்ததால் இன்காக்களின் கலசாரம், பண்பாடு, கலை இலக்கிய படைப்புகள், விளையாட்டுக்கள் என்று எதைப்பற்றியுமே உறுதியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

1911இல் ஹிராம் பிங்காம் என்பவர் தான் முதன்முதலில் இப்படி ஒரு நகரம் இருந்தது பற்றியும், அங்கு காவல்கோட்டைகள் போல் அமைக்கப்பட்டிருந்த கட்டங்கள் மற்றும் இன்றைய தொகுப்பு வீடுகள் போல் கட்டப்பட்டிருந்த அவர்களது குடியிருப்புகள் பற்றியும் விரிவாக வெளிக்கொணர்ந்தார்.

மச்சு பிச்சு என்றால் இன்காக்களின் மொழியில் 'மூத்த மலை' என்று பொருள் 1438 ஆம் வருடம் சாப்பா இன்கா (முதன்மையான அரசன்) என்று அழைக்கப்பட்ட இன்கா பாச்சாகுடெக் என்பவர்தான் கஸ்கோ நகரை தலைமை இடமாகக் கொண்டு இன்கா வம்ச பேரரசை நிறுவினார். இன்காக்களின் இராணுவத் தலைநகர் விட்கோஸ் என்றழைக்கப்பட்டது. பெருவின் மலைப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் (கிட்டத்தட்ட 15000 மைல்கள்) அவரது கட்டுப்பாட்டில்தான் இருந்தது.

அமேசான் காடுகளில் பதுங்கியிருந்த காட்டுமிராண்டி கூட்டங்கள் அவ்வப்போது கஸ்கா நகருக்குள் புகுந்து அங்குள்ள மக்களை தாக்கி சொத்துக்களை களவாடிச்செல்வத்தைத் தடுக்க அவரது ஆட்சிகாலத்தில் தான் மச்சு பிச்சு நகரம் நிர்மாணிக்கப்பட்டு கோட்டை போல் கற்சுவர்கள் கட்டப்பட்டன.

ஆனால் அவரது ஆட்சிக்குப்பிறகு நிலையான ஆட்சியைத் தரும் வலு அவருக்குப்பின் வந்த இன்கா அரசர்களுக்கு இல்லை. கஸ்கா நகரைச்சுற்றி இருந்த அடஹுவால்பா மற்றும் ஹுவாஸ்கர் ஆகிய இரு பிரிவுகளுக்கு இடையே கஸ்காவை யார் நிர்வகிப்பது என்பது குறித்து நடந்த போர் காரணமாக இரு பிரிவ்களிலும் பலரும் பலியாயினர்.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2544

### ரவி

ஏன்டி இப்ப அழுற? ஏன் இந்த வீட்ல எனக்கு அழக்கூட உரிமை இல்லயா? சரிடி நான் எதுவும் கேக்கல அதானே நீங்க எப்படி கேப்பீங்க.. நா அழுதா உங்களுக்கு என்ன...



கல்யாணமானவன் அனுபவிக்கும் சித்திரவதைகளுள் ஒன்று

### குமரன்

கல்யாணத்திற்கு பிறகு காதலிக்கிறது தான் நல்லது



அது சரி.. அதுக்கு பொண்டாட்டி ஒத்துக்குவாளா?

### சுஜாதா

ஸ்மார்ட் போன்ல
என்னென்னவோ
ஆப்ஷன்லாம் தர்றாங்க
கறுமம் இருந்த சார்ஜ்
வயர அரை
மீற்றருக்கு
மேல தர மாட்டாங்க
எவ்வளவு நேரம்
தான் ப்ளக்
பாய்ண்ட் பக்கத்திலயே
குத்தவச்சி
உக்கார்ந்து இருக்கிறது.



### விஜி

கணவன் அப்படியே ஷாக் ஆனான்.. மனைவியோட சின்ன வயசு ஸ்கூல் ரிப்போர்ட் கார்டை பார்த்து... அதில் எழுதி இருந்த கமென்ட்...



மிகவும் கீழ்ப்படிதலுள்ள அமைதியான மாணவி...

### பவித்திரா

எதுக்குடா என்ன பாத்து சிரிக்கிற...???



காலைல இருந்து எங்க மம்மியையும் காணோம்.. கிச்சனுக்குள்ள போன உங்க மம்மியையும் காணோம்.

### மாதவி

எதுக்கு வாங்கினோமோ அதைத் தவிர...



மற்ற எல்லாத்துக்கும் பயன்படும் ஒரு பொருளுக்கு டைனிங் டேபிள் என்று பெயர்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

284

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நீரிழிவு உள்ளவர்கள் சுவையாக உண்ண...

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவுவகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவு முறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகளை சுவை நிறைந்ததாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தூக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

முட்டை, பால், கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ண முடியும்.

சமையலின் பொழுது வாசனைத் திரவியங்கள், போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரக வகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக் கொள்ள முடியும். இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும் பல வகை மரக்கறி வகைகளை மாறி மாறி தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுது தான் எல்லா வகையான ஊட்டச் சத்துக்களும் எமக்கு கிடைக்கும். பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன்படுத்த முடியும். நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது. அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புப்பழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச் சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ண முடியும்.

பழங்கள் உண்ணும் பொழுது குருதிக் குளுக்கோசின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பல மடங்கு அதிகமாகும். பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது. எனவே பழங்களை



பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.

கொட்டை வகைகளான கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும்.எனவே இவற்றை இடை நேரத்தில் தேனீருடன் உண்ணமுடியும். புரதச்சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவை பட போதிய அளவில் சமைத்து உண்ண முடியும்.

மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி, கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றை பயன்படுத்தி செய்யும் உணவு வகைகளை குறைத்துக் கொள்வது நல்லது. காரணம் இவை சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோசு உண்டாகின்றது.

ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம்மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவு வகைகள் வெள்ளைநிற அரிசி வகைகள், வெள்ளைநிற மாவகைகளில் செய்யப்படும் உணவுகளிலும் பார்க்க சிறந்தவையாகும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உண்ணும் பொழுது உணவுக் கோப்பையில் அரைப் பங்கு இலை வகைகள், மரக்கறி வகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சர்க்கரை, பனங்கட்டி, குளுக்கோசு போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப் பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச் சுவையுள்ள இனிப்பூட்டிகளை பயன்படுத்துவது நல்லது. இந்த இனிப்புச் சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதி குளுக்கோசின் அளவையோ அதிகரிக்க மாட்டாது.

எண்ணெய், பட்டர், கொழுப்பு என்பன அதிகமுள்ள பொரித்த உணவு வகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்ய முடியும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை தவிர்த்து விடுவது நன்மை பயக்கும்.

அதிகளவு பழவகைகளையும், மரக்கறிவகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.

வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும், சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம். இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும்.

சோறு, பிட்டு போன்றவற்றை பரிமாறுவதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்துவோம்.

உணவை ஆறுதலாக சுவைத்து ரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரே வகையான உணவில் அனைத்து வகையான ஊட்டச் சத்துக்களும் அடங்கி இருக்காது. எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக் கொள்வது பயன்தரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பொது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org